பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2033 சித்திரை 09 திங்கட்கிழமை (22-04-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:148

## துப்பாக்கிகளை மீண்டும் முழங்க வைத்து

# அமைதியைக் குலைத்துவிட சில சக்திகள் கங்கணம்!

## தரைவழியாக மருந்து வந்தது

யாழ்ப்பாணம்,ஏப்.22

கடந்த சுமார் 12 வருடங்களின் பின்னர் முதற்றடவையாக யாழ்.குடாநாட்டு வைத்தியசாலைகளுக்கான மருந்து வகைகள் தரைவழியாக எடுத்துவரப்பட்டுள்ளன.

மருந்துப் பொருள்களுடன் கொழும்பில் இருந்து புறப்பட்ட மூன்று லொறிகள் நேற்றுமுன்தினம் இரவு 7மணிக்கு யாழ்நகரை வந்தடைந்தன.

இந்த மருந்துப் பொருள்கள் யாழ். போதனா வைத்தியசாலை, தெல்லிப்பழை மற்றும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைகள் ஆகியவற்றின்

(12ஆம் பக்கம் பார்க்க)

## தீவக நிலைமை குறித்து புலிகள் பிரமுகர் புதுவை

வட்டுக்கோட்டை,ஏப்ரல்22

**தீவுப் பகுதி நிலைவரத்தைச் சாதகமாக்கி தற்போதைய சமாதான முயற்சிகளைச் சீர்குலைத்து மீண்டும் மோதலை உருவாக்கிவிட சில சக்திகள் கங்கணம் கட்டி நிற்கின்றன.**

**சமாதான முயற்சிகள் மீது நாங்கள் மானசீகமான - அசைக்கமுடியாத - நம்பிக்கை கொண்டுள்ளோம். எனவே இத்தகைய சலசலப்புகளைப் பொருட்படுத்தாமல் மிகுந்த நிதானத்துடனும் - புத்திசாதுரியமாகவும் எங்கள் பணிகளை முன்னெடுத்து வருகிறோம்.**

**இவ்வாறு தெரிவித்தார் விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை.**

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் புலிகள் பிரமுகர் புதுவை இரத்தினதுரை உரையாற்றினார்.

வன்னியில் இருந்து வருகை தந்துள்ள இதயசுத்தியான சமாதானத்துக்கான இசைக்குழுவினரின் இசை

(12ஆம் பக்கம் பார்க்க)

### அமெரிக்கக் குழுவின் உதவியோடு

## கண்ணி அகற்றும் பணி சரசாலையில் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஏப்.22

நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் வந்துசேர்ந்த கண்ணிவெடி அகற்றும் அமெரிக்கக் குழுவினர் சரசாலைப் பகுதியில் நேற்றுப் பணிகளை ஆரம்பித்தனர்.

அமெரிக்க கண்ணி அகற்றும் பிரிவு நிபுணரான எரிக் ஸ்மித் என்பவரின் தலைமையில் வந்துள்ள இக்குழுவில் அவரது உதவியாளர் தவிர கண்ணி வெடிகளை அழிக்கும் பணியில் நிபுணத்துவம் பெற்ற 24 சிம்பாப்வே நாட்டு நிபுணர்களும் இடம்பெற்றுள்ளனர்.

ஸ்ரீலங்கா இராணுவப் பொறியியல பிரிவினருடன் இணைந்து செயற்படவிருக்கும் இக்குழுவினர், நேற்று சரசாலை முகாம் பகுதி, முன்னரங்க நிலையை அண்டிய பிரதேசம் ஆகியவற்றில் கண்ணிவெடி அகற்றும் பணியை ஆரம்பித்தனர்.

தென்மராட்சியில் கண்ணிவெடிகள் அதிகளவில் புதைக்கப்பட்டிருக்கலாம் என இனங்காணப்பட்ட பகுதிகளில் இக்குழுவினர் தொடர்ந்து பணியாற்றுவர். அதன்பின்னர் ஏனைய பகுதிகளில் பணியை மேற்கொள்வர்.

இலங்கை அரசின் வேண்டுகோளின் பேரிலேயே அமெரிக்கா இந்தக் குழுவை அனுப்பியுள்ளது குறிப்பிடத்தக்கது. (ஐ-3-6)

## ஹெல்கிஸன் புறப்பட்டார்

கொழும்பு,ஏப்.22

அரசு - விடுதலைப் புலிகள் நேரடிப் பேச்சுக்கான திகதியை முடிவு செய்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருந்த நோர்வே சமாதானக் குழுவின் தலைவரும் நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சருமான விடா ஹெல்கிஸன் நேற்று கொழும்பில் இருந்து பாரிஸ் திரும்பினார்.

கடந்த ஒருவார காலம் இலங்கையில் தங்கியிருந்த அவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் உள்ளிட்ட பல தலைவர்களுடன் பேச்சுக்கள் நடத்தி வந்தார்.

பாரிஸ் புறப்படமுன்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில் ஜூன் மாத நடுப்பகுதியில் நேரடிப் பேச்சுக்கள் ஆரம்பமாகும் எனத் தெரிவித்தார். (ஐ-3)

# குடாநாட்டில் புலிகளின் பெயரில் மோசடிகள், குற்றச்செயல்கள்!

## மக்களை எச்சரிக்கின்றது அரசியல்துறை

யாழ்ப்பாணம்,ஏப்.22

குடாநாட்டில் விடுதலைப் புலிகள் தங்கள் அரசியல் பணிகளை ஆரம்பித்துள்ள இந்தச் சமயத்தில் புலிகளின் பெயரைப் பயன்படுத்தி மோசடிகளிலும், ஏமாற்றுவேலைகளிலும் சில சக்திகள் ஈடுபட்டு வருவது தெரிய வந்துள்ளது.

புலிகள் அமைப்புக்கு களங்கம் ஏற்படுத்த திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டுவரும் இத்தகைய சக்திகளின் சமூகவிரோதச் செயற்பாடுகள் குறித்து விழிப்புடன் இருக்குமாறு எமது மக்களை வேண்டிக்கொள்கின்றோம்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல் துறையினர் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

குடாநாட்டில் அரசியல் பணி புரியும் போராளிகள் தங்களை உறுதிப்படுத்தும் அடையாள அட்டைகளை வைத்திருப்பர். அதன்மூலம் பொது மக்கள் போராளிகளை இனங்கண்டு கொள்ளமுடியும் - என்று அரசியல் துறையினர் மக்களை அறிவுறுத்தியுள்ளனர்.

யாழ்.குடாநாட்டில் அரசியல் பணி புரிவதற்கென வருகை தந்துள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் தங்கள் அரசியல் செயற்பாடுகளை விஸ்தரித்து வருவது தாங்கள் அறிந்ததே.

இதற்குப் பின்னர் எமது அமைப்பின் பெயரை மேற்காட்டி பல குற்றச் செயல்களில் சில தீய சக்திகள் ஈடுபட்டு வருகின்றன. வேண்டுமென்றே எமது அமைப்புக்குக் களங்கம் விளைவிப்பதற்காக இம்மாதிரிச் செயற்பாடுகள் இடம்பெறுகின்றன.

எமது அரசியல் பணிபுரியும் போரா

(12ஆம் பக்கம் பார்க்க)

# நாடு பிளவுபட அனுமதியோம்! ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு!!

## கதிர்காமம் பாதயாத்திரை நிகழ்வில் பிரதமர்

கொழும்பு,ஏப்.22

நாடு துண்டாடப்படுவதை ஒரு போதும் அனுமதிக்கமாட்டோம். அதே வேளை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் அதிகாரம் பரவலாக்கப்படும். ஐக்கிய இலங்கைக்குள் சகல மக்களும் ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையில் சமாதானம் மீண்டும் ஏற்படுத்தப்படவேண்டும் என்ற திட்டவட்டமான கொள்கையை எனது அரசு கடைப்பிடித்து வருகிறது.

- இவ்வாறு தெரிவித்தார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

கதிர்காமத்தில் இருந்து வட பகுதி நோக்கிய சமாதானப் பாத யாத்திரையை நேற்று ஆரம்பித்து வைத்த நிகழ்வில் உரையாற்றிய போதே பிரதமர் இவ்வாறு கூறினார்.

கதிர்காமம் கிரி விஹாரை முன்றிலில் சமாதானப் பாதயாத்திரையை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு இடம் பெற்றது.

பௌத்த மதத் தலைவர்கள், நூற்றுக்கணக்கான பொதுமக்கள் கலந்துகொண்ட அந்த வைபவத்தில் உரையாற்றிய பிரதமர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டின் பிரதேச தன்னாதிக்கம் தொடர்ந்தும் பாதுகாக்கப்படும் என்றும், பயங்கரவாத நடவடிக்கைகள் கைவிடப்படும் என்றும் புலிகள் அறி

(12ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான முயற்சிக்கு எதிராக கொழும்பில் ஆர்ப்பாட்டங்கள்

கொழும்பு,ஏப்.22

அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு எதிராக கொழும்பின் பல்வேறு பகுதிகளிலும் பரவலாக ஆர்ப்பாட்டங்களை நடத்த எதிர்க் கட்சிகள் முடிவு செய்துள்ளன.

இதன் முதற்கட்டமாக நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கொழும்பு ஹவலொக் மைதானத்தில் ஆர்ப்பாட்டமும், பொதுக் கூட்டமும் நடைபெறும்.

முன்னாள் சபாநாயகரும், எம்.பியுமான அநுரா பண்டாரநாயக்கா, மக்கள் ஐக்கிய முன்னணியின் தலை

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி சந்திரிகா இன்று புதுடில்லி பயணம்

கொழும்பு,ஏப்.22

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நான்குநாள் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு இன்று இந்தியா புறப்படுகின்றார்.

இந்தியாவில் தங்கியிருக்கும் காலத்தில் இந்தியப் பிரதமர் வாஜ்பாய், எதிர்க்கட்சித் தலைவி சோனியா காந்தி மற்றும் முக்கிய அமைச்சர்களைச் சந்தித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பேச்சு நடத்துவார்.

இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்னர் ஜனாதிபதி இந்தியாவுக்கு மேற்கொள்ளும் முதலாவது உத்தியோகபூர்வ விஜயம் இதுவாகும்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விடுதலைப் புலிகளோடு ஆரம்பித்துள்ள சமாதான முயற்சிகள் தொடர்பாக இந்த விஜயத்தின்போது ஜனாதிபதி குமாரதுங்க தனது கருத்துக்களை

(12ஆம் பக்கம் பார்க்க)

## தாய்லாந்து பேச்சுக்கு முன்னர் பிரதமரும் இந்தியா செல்வார்

கொழும்பு,ஏப்.22

அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுக்கள் ஜூன் மாத நடுப்பகுதியில் தாய்லாந்தில் நடைபெறுவதற்கு முன்பாக -

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஜூன மாத முற்பகுதியில் இந்தியாவுக்கு விஜயம் செய்து இந்தியப் பிரதமர் மற்றும் தலைவர்களுடன் முக்கிய பேச்சுக்களை நடத்துவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுக்களில் இடம்பெறவுள்ள விவகாரங்கள் குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்தியப் பிரதமர் வாஜ்பாய், எதிர்க்கட்சித் தலைவி சோனியாகாந்தி, தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா ஆகியோருடன் பேசுவார் என்று தெரிவிக்கப்படுகிறது. (எ)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்










கண்ணிவெடிகளை அகற்றும் பணியில் படையினருக்கு உதவுவதற்காக குடாநாட்டுக்கு வருகை தந்துள்ள அமெரிக்க நிபுணர்கள் குழு நேற்று சரசாலைப் பகுதியில் தனது பணியை ஆரம்பித்தது.
நேற்று படையினரின் ஏற்பாட்டில் சரசாலையில் நடைபெற்ற விளையாட்டு நிகழ்வு ஒன்றில் அமெரிக்க நிபுணர்கள் கலந்துகொண்டனர். அங்கு எடுக்கப்பட்ட படங்கள் இவை.
*(படங்கள்:றோய்)*

## பேருவளை நகரமேயர் யாழ்.விஜயம்

யாழ்ப்பாணம்,ஏப்.22

நான்கு நாள் விஜயம் மேற்கொண்டு யாழ்ப்பாணம் வந்திருந்த பேருவளை நகர மேயர் மஸாஹிம் முஹமட் இன்று கொழும்பு திரும்புகிறார்.

கடந்த 16 ஆம் திகதி பேருவளை நகர மேயராக பதவியேற்றுக் கொண்ட இவர், தனது உத்தியோக பூர்வ முதல் விஜயத்தை மேற்கொண்டு யாழ்ப்பாணம் வந்திருந்தார்.

யாழ்.மாநகர மேயர் மற்றும் சபை உறுப்பினர்கள், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்படப் பலரையும் சந்தித்துப் பேசினார்.

வடக்கு-தெற்கு அரசியல் புரிந்துணர்வு, இன ஒற்றுமை உட்பட பல முக்கிய விடயங்கள் தொடர்பாக அவர் கலந்துரையாடியுள்ளார். (ஜ-9-6)

## சுன்னாகத்தில் இசை நிகழ்ச்சி

யாழ்ப்பாணம்,ஏப்.22

வன்னியில் இருந்து வருகை தந்துள்ள இதயசுத்தியான சமாதானத்துக்கான இன்னிசைக் குழுவின் இசை நிகழ்வு இன்று மாலை 5 மணிக்கு சுன்னாகம் சந்தை மைதானத்தில் இடம்பெறவிருக்கின்றது.

பிரபல பாடகர்களான எஸ்.சி.சாந்தன், நிரோஜன், திருமலை சந்திரன், செங்கதிர், தவமலர், பிரின்ஸி, குட்டிக் கண்ணா ஆகியோர் பிரபல இசை அமைப்பாளர் எஸ்.பி.ஸ்வரநாதனின் இசையமைப்புடன் இன்னிசை கானமழை பொழியவுள்ளனர். (ஐ-3)

### பிரபா குறித்த தீர்மான விவகாரம்:

# ஈழத் தமிழர்களுக்கு தி.மு.க. துரோகம் இழைத்துவிட்டது

## வை.கோபாலசாமி சாடல்

தலைவர் வே.பிரபாகரனைக் கைதுசெய்யுமாறு கோரி தமிழ்நாடு சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் குறித்த விவாதத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்ப்புத் தெரிவிக்காமல் நடுநிலைமை வகித்தமை பாரிய வரலாற்றுத் தவறு என்று ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோபாலசாமி சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தத் தீர்மானத்தைத் தி.மு.க. எதிர்க்காமல் விட்டது, ஈழத்தமிழ் மக்களுக்கு அக்கட்சி இழைத்த மிகப் பெரிய வரலாற்றுத் துரோகம் என்றும் அவர் சாடியுள்ளார்.

அத்துடன் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தின் உடல்நிலையை கருத்திற்கொண்டு, அவரை இந்தியாவில் சிகிச்சை பெற அனுமதிக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்திக் கூறியுள்ளார். (ஒ-9-6)

## வேலணையில் பதாகைகள் தீக்கிரை

யாழ்ப்பாணம்,ஏப்.22

வேலணைப் பகுதியில் நேற்று மாலை 6.30 மணியளவில் டிரக் ஒன்றில் வந்த சீருடையினர் அப்பகுதியில் கட்டப்பட்டிருந்த பதாகைகள், கொடிகள் ஆகியவற்றை அறுத்தெறிந்தனர் என்றும் -

பின்னர் அவற்றை அந்தப் பகுதியில் ஒன்றாகக் குவித்து தீயிட்டனர் என்றும் -

அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன. (ஐ-3)

## வேலையற்ற பட்டதாரிகளுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.22

இதுவரை வேலை வாய்ப்பினைப் பெற்றுக்கொள்ளாத வணிக முகாமைத்துவ பட்டதாரிகள், கணக்கியலில் உயர்தேசிய டிப்ளோமா, வணிகவியல் உயர் தேசிய டிப்ளோமா பட்டதாரிகள் அனைவரையும் இன்று காலை 11.30 மணிக்கு ஆரியகுளம் சந்தியில் உள்ள உயர்கல்லூரியில் ஒன்று கூடுமாறு வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் கேட்டுள்ளது.

சங்கத்தின் நிர்வாக சபை உறுப்பினர்களை இன்று 10.30 மணிக்கு வருகை தருமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-13)

### ஏ-9 பாதையூடான சேவை

# தனியார் பஸ் அதிகாரிகள் புதனன்று புலிகளோடு பேச்சு

வவுனியா,ஏப்.22

ஏ-9கண்டி வீதி ஊடாக தனியார் பஸ்போக்குவரத்து நடத்துவது தொடர்பாக தனியார் பஸ் போக்குவரத்து நிறுவன அதிகாரிகளும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளும் எதிர்வரும் புதன்கிழமை பேச்சு நடத்தவிருக்கின்றனர்.

விடுதலைப் புலிகளின் அழைப்பின் பேரில் இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளது என்றும் -

தமது நிறுவனம் மூலம் நடத்தப்படும் சேவையில் படையினர் எவரும் ஏற்றிச் செல்லப்படமாட்டார்கள் என்ற உறுதி மொழியை இந்தச் சந்திப்பில் புலிகளிடம் தெரிவிக்க இருப்பதாகவும் -

தனியார் போக்குவரத்து நிறுவனத்தின் தலைவர் கெமுனு குலதுங்க தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் பங்குபற்ற ஐவர் கொண்ட குழு நாளை கிளிநொச்சிக்குப் புறப்படவிருக்கின்றது என்றும் அவர் சொன்னார். (ஐ-3)

### பிரபாவை கைதுசெய்யக் கோரும்

# தமிழக அரசின் தீர்மானத்துக்கு 'தினமணி' நாளிதழ் கண்டனம்

ராஜீவ் கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள தலைவர் பிரபாகரனை கைதுசெய்து இந்தியாவுக்குக் கொண்டுவரும்படி மத்திய அரசைக் கோரும் தீர்மானத்தை தமிழக சட்டசபை நிறைவேற்றியிருப்பது துர்ப்பாக்கியமானது என பிரபல தமிழகப் பத்திரிகையான 'தினமணி' விமர்சித்துள்ளது.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு சமாதானமான முறையில் தீர்வு காண இருதரப்பினரும் முன்வந்து முயற்சிகளை மேற்கொண்டுள்ள நிலையில், தமிழக அரசின் தீர்மானம் குறித்து 'தினமணி' பத்திரிகை கடும் கண்டனம் வெளியிட்டுள்ளது.

அத்துடன் முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலையுடன் ஈழத்தமிழ் மக்களின் எதிர்காலத்தைத் தமிழக அரசு முடிச்சுப் போடுவது விசித்திரமானது மட்டுமல்ல, விபரீதமானதும் கூட என அந்தப் பத்திரிகை தெரிவித்துள்ளது. (ஒ-9-6)

# பிரபாவின் அழைப்புக்கு யாழ்.முஸ்லிம்கள் நன்றி

யாழ்ப்பாணம்,ஏப்.22

கடந்தகால கசப்புணர்வுகளை மறந்து யாழ்ப்பாண முஸ்லிம்கள் தங்களது மரபுவழித் தாயகத்தில் அச்சமின்றியும் கௌரவமாகவும் வந்து குடியேறி வாழலாம் என்ற விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் அழைப்பினால் மகிழ்வடைவதுடன் நன்றியையும் தெரிவிக்கின்றோம்.

- இவ்வாறு புத்தளம் வாழ் யாழ்., கிளிநொச்சி முஸ்லிம் மக்கள் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

மேலும் கடந்த காலங்களைப் போல எவ்வித பதற்றமும் ஏக்கமுமின்றி வாழவும் கறைபடிந்த நிகழ்வுகளுக்கு இடமளியாவண்ணம் செயற்பட உதவுமாறும் விடுதலைப் புலிகளையும் குடாநாட்டு மக்களையும் அந்தச் சங்கம் கேட்டுள்ளது.(ஒ-13)

# புலிகளின் தாக்குதல்கள் அடங்கிய வீடியோ பிரதிகள் விநியோகம்

யாழ்ப்பாணம்,ஏப்.22

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் வரலாறு மற்றும் புலிகள் நடத்திய தீரம்மிகு தாக்குதல்கள் தொடர்பான வரலாற்று நிகழ்வுகளை உள்ளடக்கிய வீடியோ ஒளி நாடாக்களை தமிழீழ விடுதலைப் புலிகள் யாழ்ப்பாணத்தில் வெளியிட்டுள்ளனர்.

யாழ்நகரில் உள்ள வீடியோ பிரதிகளை விநியோகிக்கும் நிலையங்களிலும் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல்துறை அலுவலகத்திலும் இந்த வீடியோ பிரதிகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று 'நிதர்சனம்' நிறுவனம் தெரிவித்துள்ளது.

★ முல்லைத்தீவு மீட்பு - 'ஓயாத அலைகள்' - ஒன்று.

★ கிளிநொச்சி மீட்பு - 'ஓயாத அலைகள்' - II

★ ஆனையிறவு மீட்பு - 'ஓயாத அலைகள்' - III

★ 'ஜெயசிக்குறு' முறியடிப்பு (வணங்காத வன்னி மண்)

★ பலாலி மீதான கரும்புலி தாக்குதலை உணர்வுபூர்வமாக சித்திரிக்கும் உணர்ச்சிக் காவியம் (தேசத்தின் புயல்கள்)

போன்ற வரலாற்றுச் சிறப்புமிக்க வீடியோ நாடாக்களே இங்கு விநியோகிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-180)

## திருத்தப்பட்ட அனுமதி அட்டைகள்

யாழ்ப்பாணம்,ஏப்.22

இன்று ஆரம்பமாக விருக்கும் ஜி.சீ.ஈ.உயர்தர பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களில் அனுமதி அட்டை மாற்றம் குறித்து விண்ணப்பித்தவர்களின் திருத்தப்பட்ட அட்டைகள் யாழ்.கல்வி வலயத்துக்கு வந்து சேர்ந்துள்ளன.

சம்பந்தப்பட்ட மாணவர்கள் கல்வி அலுவலகத்தில் அவற்றைப் பெற்றுக் கொள்ளமுடியும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

## பிரபா - ஹக்கீம் சந்திப்பை சாடுகிறார் ஜே.வி.பி. உறுப்பினர்

கொழும்பு,ஏப்.22

தலைவர் பிரபாகரன் - ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் ஆகியோரிடையேயான சந்திப்பை மிகையாகச் சாடியிருக்கிறார் ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் அன்.ஜன் உம்மா.

கிழக்கு மாகாண முஸ்லிம்களை தனது செயற்பாட்டினால் நன்றாக ஹக்கீம் ஏமாற்றிவிட்டார் என்று அவர்மீது உம்மா குற்றம் சுமத்தினார்.

தேசியக் கட்சிகளில் ஹக்கீமின் ஆதரவாளர்களைவிட அதிகமான முஸ்லிம்கள் அங்கம் வகிக்கின்றனர்.

முஸ்லிம்களுடன் நட்புரிமை கொண்டாடும் புலிகளின் அரசியல் கொள்கை வியாபார ஏற்பாடு போன்றது. ஈழக் கோரிக்கை எட்டப்பட்டால் மீண்டும் முஸ்லிம்களை அவர்கள் விரட்டியே தீருவார்கள்.

விடுதலைப் புலிகள் வடக்கு - கிழக்கைத் தமிழரின் தாயகமாகவே கருதுகின்றனர். ஆகவே அவர்களுடன் இணக்கம் பற்றிக் கைச்சாத்திடுதல் கேலிக் கூத்தானதொன்றே.

- இவ்வாறு தெரிவித்தார் அன்ஜன் உம்மா. (ஓ)

# அளவெட்டியில் இன்றும் நாளையும் வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி

யாழ்ப்பாணம்,ஏப்.22

அளவெட்டி பொதுச்சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் இன்றும் நாளையும் வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

*இன்று தடுப்பூசி ஏற்றப்படும் இடங்களும், நேரங்களும் வருமாறு:-*

மு.ப.8.00 - 9.00 கும்பழை பாரதி சனசமூக நிலையம்.

மு.ப.9.00 - 10.00 மணற்புலம் பொது மண்டபம்.

மு.ப.10.00 - 10.30 கணேஸ்வரம் ஐக்கிய வாலிப சனசமூகநிலையம்.

மு.ப.10.45 - 11.15 குருக்கள் கிணற்றடி பிள்ளையார் சனசமூக நிலையம்.

மு.ப.11.30 - 12.00 கிராம சேவையாளர் அலுவலகம், கணேஸ்வரம்.

பி.ப.1.15 - 1.45 கிராம சேவையாளர் அலுவலகம், அளவெட்டி மத்தி.

பி.ப.1.45 - 2.15 கிராமசேவையாளர் அலுவலகம், அளவெட்டி மேற்கு.

பி.ப.2.15 - 2.45 கலைவாணி சனசமூக நிலையம், அள.வடக்கு.

பி.ப.3.00 - 3.30 அறிவொளி சனசமூக நிலையம், அள.வடக்கு.

பி.ப.3.45 - 4.15 பிரதேச சபை பொது நூலகம் - மல்லாகம், அளவெட்டி.

*நாளை தடுப்பூசி ஏற்றப்படும் இடங்களும் நேரங்களும்:-*

மு.ப.8.00 - 9.00 அலுக்கை கிறிஸ்தவ தேவாலயம்.

மு.ப. 9.00 - 10.00 மத்திய மருந்தகம், அளவெட்டி.

மு.ப.10.00 - 10.30 மலைவேம்படி சந்தைக் கட்டடம்.

மு.ப.10.45 - 11.15 பத்தானை பாரதிதாசன் சனசமூக நிலையம், அள.மேற்கு.

மு.ப.11.30 -12.00 முருகபுரம் ஸ்ரீரங்கன் சனசமூக நிலையம், அள. மேற்கு.

பி.ப.1.15 - 1.45 முன்போக்கு வாலிப சனசமூக நிலையம், அள. மேற்கு.

பி.ப.1.45 - 2.15 கிராம சேவையாளர் அலுவலகம், அள.மேற்கு.

பி.ப.2.15 - 2.45 கலைநகர் கலைவாணி சனசமூக நிலையம், அள.தெற்கு.

பி.ப.3.00 -3.30 குருவளை இடம்பெயர்ந்தோர் முகாம்.

பி.ப.3.45 - 4.15 கிராம அலுவலர், அள.தெற்கு. (ஓ)

உதயன்

## சிங்களக் குடியேற்றம்

இப்போது இருக்கும் ஜே.வி.பி., சிஹல உறுமய போன்ற இனவாதக் கட்சிகள் போதா என்று புதிதாக ஓர் இனவாத அமைப்பு முளைத்திருக்கிறது.

சிங்கள மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்களின் குழு இது.

இந்தக் குழுவை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகித்தவர் மஹாஜன எக்ஸத் பெரமுனை என்ற கட்சியின் தலைவரும் எம்.பியுமான தினேஷ் குணவர்த்தன ஆவார்.

இன, மொழி, மத பேதம் எதுவும் இன்றி தொழிலாளர் வர்க்கம் ஒன்றுபடவேண்டும் என்று முழங்கி வந்த பழம்பெரும் இடதுசாரித் தலைவர் காலஞ்சென்ற பிலிப் குணவர்த்தனவின் மகன்தான் தினேஷ் குணவர்த்தன.

அவர் சிங்கள மக்களின் உரிமைகளை மட்டும் காப்பாற்றப் புறப்பட்டிருக்கிறார்.

சிங்கள மக்களுக்கு இப்போது இல்லாத உரிமை எது? எந்த அரசாவது சிங்கள மக்களின் உரிமைகளை எப்பொழுதாவது பறித்தது உண்டா?

உரிமைகளைப் பறிக்கவேண்டும் என்றால் அதற்கு இந்த நாட்டின் சிறுபான்மையினரான தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் இருக்கும்போது அரசாங்கம் அவர்களை விட்டுவிட்டு ஏன் சிங்கள மக்களிடம் போகப்போகிறது?

சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவை அறிமுகப்படுத்தும் கூட்டத்தின் கதாநாயகனாக விளங்கியவர் முன்னாள் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க.

அவர் தமது உரையிலே வழக்கம்போல தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீது வசைமாரி பொழிந்து குற்றச்சாட்டுக்களை அடுக்கிக்கொண்டே போனார்.

சமாதான முயற்சிகளில் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் புலிகள் கேட்டவற்றை எல்லாம் கொடுக்கிறது. ஆனால், அவர்கள் பதிலுக்கு எதையுமே கொடுக்கவில்லை. ஆக, நட்டம் அரசுக்குத்தான் என்றார் ரத்னசிறி விக்கிரமநாயக்க.

இடைக்கால நிர்வாகம் புலிகள் கையில் இருந்தால் அவர்கள் வடக்கு - கிழக்கில் சிங்களவர்களைச் சுரண்டுவார்கள்; அவர்களைத் துன்புறுத்துவார்கள் என்றெல்லாம் அச்சம் தெரிவித்திருக்கிறார்.

வடக்கில் யுத்தம் ஆரம்பமானபோது சிங்களவர்கள் அங்கிருந்து புலிகளால் விரட்டியடிக்கப்பட்டார்கள் என்றும் ஒரு குற்றச்சாட்டு.

வடக்கிலிருந்து அகற்றப்பட்டவர்கள் முஸ்லிம்கள் மட்டும்தான். அதற்கு வருத்தம் தெரிவிக்கப்பட்டு அது தொடர்பாக முஸ்லிம் காங்கிரஸுடன் இணக்கம் காணப்பட்டுவிட்டது. தமிழர்களைப் போல சிங்களவர்களும் யுத்தபீதியால் தாமாகவே வடக்கிலிருந்து வெளியேறினர் என்பதுதான் உண்மை.

முன்னர் வடக்கில் குடியிருந்த சிங்கள மக்களை மீண்டும் அங்கே குடியமர்த்தவேண்டும், அவர்களைப் பராமரிக்கவேண்டும், அவர்களுக்குத் தகுந்த நஷ்டஈடு வழங்கவேண்டும் என்றெல்லாம் மார்க்ஸிஸக் கட்சிகள் அரசுக்குக் கோரிக்கை விடுத்துள்ளன. இந்தக் கோரிக்கைகளை வலியுறுத்த, மக்கள் பேரணி ஒன்று பிரதமரின் இல்லத்துக்குச் செல்லப்போவதாகவும் அந்தக் கட்சிகள் எச்சரிக்கை விடுத்துள்ளன.

இந்த மார்க்ஸிஸக்காரர்களும் புதிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவில் இருக்கிறார்கள்.

வடக்கிலிருந்து வெளியேறிய சிங்கள மக்களை அங்கே திரும்பி வரக்கூடாது என்று எவரும் இதுவரை தடை விதித்தது கிடையாது.

தமிழ்ப் பகுதிகளில் சிங்கள மக்கள் அரசியல் காரணங்களுக்காக அரசினால் திட்டமிட்டுக் குடியேற்றப்படுவதற்கே எதிர்ப்புத் தெரிவிக்கப்படுகிறது.

[illegible], 1983 கலவரங்களின்போது பாணந்துறை, கொழும்பு போன்ற தென் பகுதிகளிலிருந்து தமிழ் மக்கள் வடக்கு - கிழக்குக்கு ஓடவேண்டியதாயிற்று. நிலைமை திருந்தியதும் அரசாங்கம் தம்மை பழைய இடங்களில் கொண்டுபோய் குடியமர்த்த வேண்டும் என்று அவர்கள் கோரியதில்லை; தாமே சென்று குடியமர்ந்தார்கள்.

வடக்கு - கிழக்கிலிருந்து வெளியேறிய சிங்கள மக்களை மட்டும் அரசாங்கம் கொண்டு சென்று குடியமர்த்தவேண்டும்; அவர்கள் பராமரிக்கப்பட வேண்டும் என்றெல்லாம் கேட்பதென்றால், அப்படிப்பட்ட விசேஷமான தனியுரிமைகளுக்காகத்தான் புதிய சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர் குழுவா? தமிழ்ப் பகுதிகளில் சிங்களக் குடியேற்றத்துக்கு இது புதிய திட்டமா?

# யாழ்.வரும் தென்னிலங்கை மக்கள் நல்லுறவுகளைப் பேணுவதில் ஆர்வம்

யாழ்ப்பாணம்,ஏப்.22

அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள சமாதான நல்லெண்ணத்திற்கான புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு அமைய ஏ-9 பாதை திறக்கப்பட்டதை அடுத்து யாழ்.வந்த தென்னிலங்கை மக்கள் நல்லுறவுகளைப் பேணுவதில் அக்கறை காட்டி வருவதை அவதானிக்க முடிகிறது.

நீண்ட காலமாக குடாநாட்டுடன் தொடர்பற்றிருந்த சிங்கள, முஸ்லிம், மலையக மக்கள் அதிக எண்ணிக்கையில் யாழ்ப்பாணத்திற்கு வருகை தருகின்றனர். அவ்வாறு வருகை தந்தவர்களில் காலி மற்றும் மாத்தறையைச் சேர்ந்த 40பேர் கொண்ட சுற்றுலா குழுவினர் நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ்.நகரப் பகுதியில் வசிக்கும் வறிய 100குடும்பங்களுக்கு யாழ்.ரெலிக்கொம் நிறுவனத்தில் வைத்து 300 ரூபாவுக்கும் அதிகமான பெறுமதியுடைய உலர் உணவுப் பொருள்களை அன்பளிப்பாக வழங்கியதுடன் குடும்ப அங்கத்தவருடன் உரையாடி நல்லுறவுகளை வளர்ப்பதில் ஆர்வம் காட்டினர்.

இந்தப் பொருள்களை வழங்கும் நிகழ்வை யாழ்.ரெலிகொம் நிறுவன பாதுகாப்பு பொறுப்பதிகாரி எஸ்.பத்திரத்ன ஆரம்பித்து வைத்தார்.

இதேவேளை இங்கு வந்த சிங்கள மக்கள் யாழ் மாவட்டத்தில் உள்ள தென்னை மற்றும் பனம் பொருள்களை அதிகளவில் வாங்கிச் செல்வதைக் காணமுடிகிறது.

நூற்றுக்கணக்கான முஸ்லிம் மக்களும் யாழ்ப்பாணம் வந்துள்ளனர். அவர்களில் பெரும்பாலானவர்கள் எதிர்கால வியாபார நோக்கிலும், தமது சொத்துக்களைப் பார்வையிடவும், மீள தமது கட்டடங்களை புனரமைக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் இங்கு வந்துள்ளதாகத் தெரிவித்தனர்.

(ஓ-180)

# ஒரு வீரத்தாயின் நினைவுக் கூட்டத்தில் பங்குபற்றுவதையிட்டு நான் மகிழ்கிறேன்

## அன்னை பூபதி நினைவு தினத்தில் புண்ணியசார தேரர்

மட்டக்களப்பு,ஏப்.22

இன்று நாம் ஒரு வீரத்தாயின் நினைவுக் கூட்டத்தில் கலந்துகொண்டுள்ளோம். இந்த நிகழ்வில் கலந்துகொள்வதற்கு எனக்கும் என்னுடன் வந்திருக்கும் பௌத்த தேரர்களுக்கும் சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன்.



புதிதாகத் திறக்கப்பட்ட அன்னை பூபதியின் நினைவாலயம்

மட்டக்களப்பு நாவலடியில் நடைபெற்ற அன்னை பூபதியின் 14ஆவது ஆண்டு நிறைவு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய குருணாகல் மகாகல்கடவெல புண்ணியசார தேரர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த 1987ஆம் ஆண்டு ஆட்சியில் இருந்த ஆட்சியாளர்கள் வடக்குக் கிழக்கில் சமாதானத்தை ஏற்படுத்துவோம் எனக்கூறி இலங்கை - இந்திய ஒப்பந்தத்தைச் செய்து இந்தியப் படையை இங்கு வரவழைத்தனர். இதையடுத்து நாட்டில் அமைதி ஏற்பட்டுவிடும் என்று தமிழ்மக்கள் நம்பினர். இந்தியப் படையை வரவேற்றனர். ஆனால் அமைதியை ஏற்படுத்த வந்த அப்படை இங்கு அட்டூழியங்களைச் செய்தது.

தமிழ்மக்களுக்கு எதிராக இந்தியப் படை செய்த அட்டூழியங்களை சகித்துக்கொள்ளமுடியாத அன்னையர் முன்னணி சாகும் வரையிலான உண்ணாவிரதத்தை இந்தியப் படைக்கும் இந்திய அரசுக்கும் எதிராகச் செய்வதென முடிவெடுத்தது. அந்த உண்ணாவிரதத்தில் ஈடுபட்டு தனது மக்களுக்காக உயிர்த்தியாகம் செய்தவர் அன்னை பூபதி. தனது மக்களுக்காகத் தனது உயிரைத் தியாகம் செய்த அவருக்கு இன்று அவரின் சொந்த இடத்திலேயே நினைவுத்தூபி அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாறான வீரத்தாயின் நினைவுநாளை அனுஷ்டிப்பதுடன் மட்டும் நின்றுவிடாமல், நீங்கள் அனைவரும் மக்களுக்காக அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டும் என்றார்.

தலைவர் பிரபாகரனைக் கைது செய்ய இந்தியப் படையை இங்கு அனுப்பவேண்டுமென இந்திய மத்திய அரசுக்கு ஜெயலலிதா அழுத்தம் கொடுத்து வருகின்றார். இவரின் இக்கூற்றுக்கு நாம் இனமதபேதமின்றி எதிர்ப்புத் தெரிவிக்கவேண்டும் என்றும் புண்ணியசார தேரர் தெரிவித்தார்.

(ம)

### கடந்த 6 வருடங்களாக குடாநாட்டில் மழுங்கி இருந்த

# கலை மற்றும் இலக்கியம் சிறப்பாக வளர அனைவரும் இணைந்து பாடுபட வேண்டும்

## கலைஞர்களுடனான சந்திப்பில் புதுவை இரத்தினதுரை

யாழ்ப்பாணம்,ஏப்.22

கடந்த 6 வருடங்களாக குடாநாட்டில் கலை இலக்கிய வடிவங்கள் பெரிதாக ஊற்றெடுக்கவில்லை. இனிவரும் காலங்களில் இங்கு கலை, இலக்கியம் என்பன சிறப்பாக வளர்வதற்கு அனைவரும் இணைந்து பாடுபடவேண்டும்.

- இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை.

நேற்றுமுன்தினம் பிற்பகல் 3மணிக்கு கொக்குவில் நாமகள் வித்தியாலயத்தில் பாடகர்கள், இசைக் கலைஞர்கள், எழுத்தாளர்கள், நடிகர்களுடன் நடத்திய கலந்துரையாடலிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

கடந்த 6 வருடங்களில் இங்கு என்ன நடந்தது எப்படி நடந்தது என்பதெல்லாம் எமக்குத் தெரியும். இங்குள்ள ஒவ்வொரு அசைவுகளையும் நாம் அவதானித்தபடியே இருந்தோம். அந்த வகையில் கலை இலக்கியங்கள் எந்த வழியில் போனது எப்படி உயர்ந்தது தாழ்ந்தது என்பது பற்றியும் நாம் அறிந்திருந்தோம்.

எதிர்வரும் 3வருடங்களுக்கு வடக்கு - கிழக்கின் இடைக்கால நிர்வாகத்தை விடுதலைப் புலிகள் பொறுப்பேற்கவிருக்கிறார்கள். அந்த மூன்று வருட காலத்தில் எம்மால் செய்யக்கூடிய சகல பணிகளையும் செய்வோம். அந்த வகையில் கலைப்படைப்புகள், இலக்கியங்கள், ஒலி, ஒளி நாடாக்கள், நாடகங்கள் என்பவற்றை அதிகளவில் வெளியிட்டு அதன் மூலம் எமது சமுதாயத்தில் முன்னேற்றங்களைக் காண முடியும்.

இந்த முன்னேற்றம் என்பது தனிமனிதனின் உழைப்பாக மட்டும் இருக்காமல் ஒட்டுமொத்தமான மக்கள் எழுச்சியாக விளங்கவேண்டும். இலக்கியப் படைப்பாளிகள் குடாநாட்டில் கடந்த ஆறு வருடங்களில் நிகழ்ந்தவற்றை ஆவணப்பதிவுகளாக வைத்திருப்பதற்கு ஏற்ற வகையில் இலக்கியங்களைப் படைக்கவேண்டும்.

இதற்குரிய சகல ஒத்துழைப்புக்களையும் வழங்க எமது கலை பண்பாட்டுக் கழகம் தயாராக உள்ளது - என்றார்.

இந்தக் கலந்துரையாடலில் விடுதலைப் புலிகளின் பிரமுகர்களான இளம்பரிதி, பாப்பா மற்றும் நிதர்சனம் பொறுப்பாளர் சேரலாதன் ஆகியோரும் கலந்துகொண்டனர். (ம-4)

### நாளை

சித்திரை 10
செவ்வாய்க்கிழமை
(23.04.2002)
திதி : ஏகாதசி
மாலை 6.42 வரை.
நட்சத்திரம் : பூசம்
பின்னிரவு 5.33 வரை
ஏகாதசி விரதம்
சுபநேரம் : 10.30 - 12.00
ராகுகாலம்: 3.00 - 4.30
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

தன்னம்பிக்கை இல்லாத வாழ்க்கை காலால் நடப்பதற்கு பதில் தலையால் நடப்பதைப் போன்றது.

# நெடுந்தீவில் மிக விரைவில் புலிகளின் அரசியல் அலுவலகம்

## கூட்டமைப்பினரிடம் தலைவர் பிரபா உறுதி

யாழ்ப்பாணம்,ஏப்.22

தீவுப் பகுதியில் விடுதலைப் புலிகள் தமது செயற்பாடுகளை ஆரம்பிக்க இருக்கின்றனர். நெடுந்தீவிலும் அவர்களின் அரசியல்துறை அலுவலகம் ஒன்று நிறுவப்படவுள்ளது.

அண்மையில் விடுதலைப் புலிகளின் தலைவரைச் சந்தித்த தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் தலைவர் பிரபாகரனால் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

"தீவுப் பகுதியில் ஈ.பி.டி.பி. ஆட்சி புரிகின்றது. இதனால் அங்கு எந்தக் கட்சியினரும் செல்லமுடியாத நிலை காணப்படுகின்றது" என்று கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தலைவர் பிரபாகரனிடம் எடுத்துக் கூறினர்.

இதற்குப் பதிலளித்த அவர் விரைவில் தீவகத்தில் தமது அரசியற் பணிகள் ஆரம்பமாகும் என்றும் -

நெடுந்தீவில் அரசியல்துறை அலுவலகம் திறக்கப்படும் என்றும் -

அதன் பின்னர் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்கு சென்று வரமுடியும் என்றும் -


தெரிவித்தார்.

(ம-3)

## நூல்நிலையத் திறப்பு விழா தாமதமாகலாம்

யாழ்ப்பாணப் பொது நூல்நிலையத்தின் வர்ணப் பூச்சு வேலைகள் மழை காரணமாகத் தாமதமாவதால் அதன் திறப்பு விழா மேலும் காலதாமதமாகலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. இந்த மாதத்துடன் பூச்சுவேலைகள் முற்றுப்பெறும் என்ற எதிர்பார்ப்புடன் அடுத்துவாத முற்பகுதியில் இதன் திறப்பு விழாவை நடத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(ஓ-4)



# வெற்றிகரமான 100 நாட்கள்!

மக்களுக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றிய நாம் நாட்டை பொருளாதார, சமூக, அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்வதற்கான அரசாங்கத்தின் குறுகிய கால திட்டம் எமது 100 நாள் சாதனையின் மூலம் வெற்றிகரமாக நிறைவேறி இருப்பது குறித்து பெருமையடைகின்றோம். [illegible]

[illegible] 536, கொழும்பு. [illegible] 433349 ஈ-மெயில்: [illegible]@sltnet.lk இணையதளம்: www.100day.org




## சமாதான செயற்பாடு மற்றும் ஜனநாயகம்

[illegible]




## மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்

[illegible]




## பொருளாதார மறுமலர்ச்சி

[illegible]




## ஆற்றல் மிக்க அரச நிர்வாகம்

[illegible]



## அடிப்படை உரிமைகள்

[illegible]



## இளைஞர், விளையாட்டு மற்றும் கலாசாரம்

[illegible]

## பண்பான சமுதாயம் - வளமான பொருளாதாரம்

### புரிந்துணர்வு உடன்பாட்டையடுத்து

# புலிகள் ஆதரவுச் செயற்பாடுகள் தமிழ்நாட்டில் அதிகரிக்கின்றன

சென்னை,ஏப்.22

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர் தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகள் ஆதரவுச் செயற்பாடுகள் அதிகரித்து வருவதாகக் கூறப்படுகிறது. விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு தெரிவிக்கும் கூட்டங்கள் பலவும் நடத்தப்படுகின்றன.

அத்தகைய கூட்டமொன்றில் உரையாற்றிய தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் -

10 வருடங்களுக்கு முன்னர் புலிகளின் தலைவர் பிரபாகரனைப் பற்றி புத்தகமொன்றை வெளியிட்டதற்காக இப்போது ஒருவரை தமிழக அரசு கைதுசெய்துள்ளதாகவும் -

ஆனால், கைது செய்யப்படுவது பற்றி தனக்கு அச்சமேதும் இல்லையென்றும் -

தெரிவித்தார்.

'பிரபாகரன் பயங்கரவாதியல்ல; அவர் ஒரு விடுதலைப் போராட்டத் தலைவர்' என்றும் - பழ.நெடுமாறன் கூறியுள்ளார்.

இதற்கிடையில் இராமநாதபுரத்துக்குத் தெற்கே கடற்பகுதியில் வைத்து சந்தேகத்துக்கிடமான படகொன்றைத் தாம் சோதனையிட்டதாகவும் -

அதில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஆயிரத்து 500 பிரசார ஒளி மற்றும் ஒலி நாடாக்கள் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டதாகவும் -

இராமேஸ்வரம் சிறப்புப் படையணியைச் சேர்ந்த அதிகாரியான ஆர்.கே.சக்கரவர்த்தி தெரிவித்தார்.

4 பேரில் அந்தப் படகில் இருந்த மூவர் கடலில் குதித்து நீந்தித் தப்பிவிட்டதாகவும் -

ஒருவர் மட்டுமே கைதுசெய்யப்பட்டதாகவும் -

அவர் மேலும் தெரிவித்தார்.

சென்னையில் சேத்துப்பட்டு என்ற இடத்தில் விடுதலைப் புலிகளின் ஆயிரத்து 200 பிரசாரப் புத்தகங்களையும், பிரசுரங்களையும் வைத்திருந்த ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாகத் தமிழகப் பொலீஸார் தெரிவித்தனர்.

இந்தியாவில் சமீபத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழேயே சோதனைகள் நடத்தப்பட்டு, விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் கைது செய்யப்படுவதாகக் கூறப்படுகிறது. பாகிஸ்தான் ஆதரவுபெற்ற தீவிரவாதிகளிடம் இருந்து இந்தியாவை பாதுகாப்பதற்காகவே பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் கொண்டு வரப்படுவதாக இந்தியப் பிரதமர் வாஜ்பாய் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஒ)

## பத்து வருடங்களுக்குப் பின்னர் வீதி மக்களின் போக்குவரத்துக்கு!

மட்டக்களப்பு,ஏப்.22

மட்டக்களப்பு, வாழைச்சேனையில் கடந்த பத்து வருடங்களாக மூடப்பட்டிருந்த உதவிப் பொலீஸ் அத்தியட்சகரின் காரியாலயத்திற்கு முன்பாகச் செல்லும் பிரதான வீதி மீண்டும் பொதுமக்களின் போக்குவரத்துக்காகத் திறந்துவிடப்பட்டுள்ளது.

எனினும் உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் காரியாலயத்திற்குச் சற்றுத் தொலைவில் அமைந்துள்ள பொலீஸ் நிலையத்துக்கு முன்னால் செல்லும் பிரதான வீதி தொடர்ந்தும் மூடப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு - வாழைச்சேனை பிரதான வீதியில் இந்த உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் காரியாலயம் 1990ஆம் ஆண்டு தொடக்கம் தனியார் வீடொன்றில் இயங்கி வருகின்றது. இதனால் இந்த வீதி 1992ஆம் ஆண்டு தொடக்கம் பொதுமக்களின் போக்குவரத்துக்கு மூடப்பட்டிருந்தது.

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத் திற்கமைய இந்த வீதி பொதுமக்களின் பாவனைக்குத் திறந்துவிடப்பட்டுள்ளது. (ம)


**AREA REPRESENTATIVE**
**Ms. AGROS - HAYLEYS**

Reference to the above vacancy those who have submitted their application to me, please meet me on 22nd or 23rd as Manager Agros - Hayleys Mr.S.M.Gamage will be here on the 24th.

**K.Sivagurunathan**
**Partner,**
**Union Agencies.**

(3050)



**விசேட அறிவித்தல்**

**யாழ்.மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்க தென்மராட்சிக் கிளை 6**
**புதுச்சந்தை, மீசாலை**

**விசேட பொதுக்கூட்டம்**

நாள் : நாளை மறுதினம் (24.04.2002) புதன்கிழமை
நேரம் : காலை 9.00 மணி (புதிய நேரம்)
இடம் : மீசாலை, மாவடிப் பிள்ளையார் கோயில்

உ.அ.அ. விசேட பதிவும், அங்கத்தவர் பதிவும் நடைபெறும்.
பதிவுக் கட்டணம் ருபா 100/-

- த.தங்கவடிவேல் *(செயலாளர்)*

(3055)



**நன்றி நவிலல்**

எமது தந்தையார்

**அமரர் A.C.செபநாயகம்**

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு எமக்கு நேரிலும், தொலைபேசி மூலமும், தந்தி மூலமும், மலர்வளையங்கள் வைத்து அஞ்சலித்து ஆறுதல் கூறியோருக்கும் மற்றும் அரச திணைக்களங்களைச் சேர்ந்த உயரதிகாரிகள், ஊழியர்கள் தனிப்பட்ட முறையிலும் குழுக்களாகவும் அஞ்சலி நிகழ்வில் கலந்துகொண்டமைக்காகவும் மேலும் இறுதி ஆராதனை நிகழ்வில் பங்குபற்றி இறை ஆசீர் வேண்டிச் செபித்த அதிவணக்கத்துக்குரிய ஆயர் குருக்கள், அருட்சகோதரிகளுக்கும் இரங்கல் உரை நிகழ்வில் பங்கு பற்றிய Lions கழக உறுப்பினர்கள் மற்றும் பெரியோர்களுக்கும் அனைத்து வழிகளிலும் எமக்கு உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*நவாலி தெற்கு,*
*மானிப்பாய்.*

- பிள்ளைகள், மருமக்கள், சகோதரர்கள்.

(3054)



**NEW SCIENCE HALL, JAFFNA**

2002/2003 பல்கலைக்கழக புகுமுக மாணவர்களுக்கு!

எமது ஒன்றுகூடல் நாளை (23-04-2002) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் VECTOR HALLஇல் இடம்பெறும். அனைவரும் கலந்து சிறப்பிக்கவும்.

- மாணவ நண்பர்கள்

(3059)



**மரண அறிவித்தல்**

**செல்வி யோகநாதன் விஜிதா B.A**

(யாழ்.நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்கினேஸ்வர வித்தியாலய ஆசிரியை)

யாழ்ப்பாணம், நல்லூர் தெற்கைச் சேர்ந்த செல்வி யோகநாதன் விஜிதா அவர்கள் 19-04-2002 வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் யோகநாதன் - ஸ்ரீபாலதேவி ஆகியோரின் அன்பு மகளும் ஐங்கரன், காலஞ்சென்ற ஸ்ரீபவன் ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*127, கச்சேரி நல்லூர் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
இ.யோகநாதன்

(3058)


## சைவப் புலவர் சங்க தேர்வுகள்

யாழ்ப்பாணம்,ஏப்.22

அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கம் நடத்தும் சைவப்புலவர் மற்றும் இளஞ்சைவப்புலவர் ஆகிய தேர்வுகள் இம்மாதம் 27,28, 29ஆம் திகதிகளில் நடைபெறும். இத்தேர்வுகள் - இலக்கணம், இலக்கியம், சைவ சித்தாந்த சாஸ்திரம், உரைநடை, இந்து சமய வரலாறு எனும் 5 வினாத்தாள்களை உள்ளடக்கியுள்ளன.

தேர்வுகள் கொழும்பு, வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் ஆகிய 5 மாவட்டங்களில் நடைபெறும். யாழ்ப்பாணத்தில் வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் தேர்வு நடக்கும்.

இதேவேளை -

21ஆம் திகதி நடைபெறவிருந்த வருடாந்த பொதுப்பட்டமளிப்பு விழா தவிர்க்கமுடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது. இத்தகவல்களை சங்கச் செயலாளர் கந்த சத்தியதாசன் தெரிவித்தார். (ஒ)


**நியூ றோயல் அக்கடமி**
சங்கத்தானை, சாவகச்சேரி.

**A/L 2004, 2003**
கலை, வர்த்தகம்

| | |
|---|---|
| Eco. | - S.வரதராஜன் |
| Acc. | - முகுந்தன் |
| Bu.St. | - முரளி |
| Ta. / H.C. / Hin. | கமலநாதன் |
| Geo. | - நித்தி |
| Lo. | - தர்மதேவா |

ஆரம்பமாகி நடைபெறுகிறது.

(3033)


# கல்விச்சாலைக் காட்சிகள்



நெடுந்தீவு மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றன.

இந்தப் போட்டிகளில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பழைய மாணவர் பிரத[illegible]ரா.ஜெயசீலன், சிறப்பு விருந்தினரான கோட்டக்கல்வி அதிகாரி க.[illegible]ரட்ணம் ஆகியோர் வித்தியாலய அதிபர் திருமதி சாரதா கிருஷ்ணதாஸ் மற்றும் பிரதி அதிபர் இரா. தர்மரட்ணம் ஆகியோரால் மைதானத்துக்கு அழைத்து வரப்படுவதையும், மாணவர்களின் அணிவகுப்பு நிகழ்வையும் படத்தில் காணலாம். (எ-111)



இனுவில் இந்துக்கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றன.

இந்தப் போட்டிகளில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட உடுவில் கோட்டக்கல்விப் பணிப்பாளர் அ.தற்பரானந்தம், சிறப்பு விருந்தினரான இனுவில் ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் ஆலயப் பிரதமகுரு சிவஸ்ரீ வை.சோமஸ்கந்தக் குருக்கள் ஆகியோர் மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம். அருகில் கல்லூரி அதிபர் செ.குபேரநாதன், ஆசிரியர் க.கனகசபாபதி ஆகியோர் காணப்படுகின்றனர்.



கரவெட்டி ஞானாசாரியார் கல்லூரியின் ஜி.சி.ஈ.உயர்தர வகுப்பு மாணவர்களின் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடமராட்சி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் பொ.வேணுகோபால் மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம். அருகில் பாடசாலை அதிபர் வே.சிவசிதம்பரம் காணப்படுகின்றார். (எ-173)




அரசின் நூறுநாள் செயற்றிட்டத்தின் கீழ் மண்கும்பான் அரசினர் தமிழ்கலவன் பாடசாலையில் நூலகம் ஒன்று அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

இது தொடர்பாக இடம்பெற்ற நிகழ்வில் வேலணைக் கோட்டக் கல்வி அதிகாரி எஸ்.தில்லைநாதன் உரையாற்றுவதைப் படத்தில் காணலாம். அருகில் பாடசாலை அதிபர் கே.குமரேசவரநாதன், கிராம அலுவலர் இ.யோகேஸ்வரன் ஆகியோர் காணப்படுகின்றனர். (எ-111)

# இனிவரும் காலங்களில் எம் தமிழ் நிலைத்திடுமா?

எத்தனை நாளைக்குத்தான் பொய் பேசுவது? இங்கேயாவது உண்மையைப் பேசுவோமே. கவிதைக்குத்தான் பொய் அழகு கவிஞனுக்குக்குமா அது அழகு? இல்லை இந்த நூற்றாண்டில் இரு நூறு மொழிகள் அழிந்து போகும் நிலையில் இருக கின்றன. தமிழுக்கும் இந்நிலை ஏற்படுமோ என்னும் அச்சம் வளர்நது வருகிறது.

வாழ்க்கைக்கு உதவாத மொழிதான் காலப்போக்கில் அழிந்து போகின்றது. அப்படி அழியாதிருக்க காலத்திற்கு ஏற்ப தன்னை மாற்றிக் கொள்ளும் வகையில் கணனியில் தமிழ் புகுத்தப்பட்டிருக்கிறது எனக் 'கவிப் பேரரசு' வைரமுத்து அண்மையில் பேசியதாக ஆனந்த விகடனில் வந்திருந்தது. உரையின் முற்பகுதி ஏற்கப்பட வேண்டியது; பிற்பகுதி சாச்சைக்குரியது. கணனியில் தமிழ் புகுத்தப்படுவதால் மாத்திரம் அது அழிவில் இருந்து காப்பாற்றப்படும் என்பது அதீதமான கற்பனை என்றே கருதலாம்.

### இணையத்தின் வலிமை

கல்வி என்பது அறிவு வளர்ச்சிக்கு இன்றியமையாதது என்று சொன்னாலும்கூட அது தொழில்சார்ந்ததாக அமையும் அல்லது பண்பாடு சார்ந்ததாக அமையும். கல்வி வழங்குவதற்கு மொழி அவசியம். அது பொதுவாக வாய்மொழியாக அமையும். சில சமயங்களில் உடற்கூறு மொழி ஆகும். மொழி ஓர் ஊடகம். எனவே எமது எண்ணங்களை எடுத்தியம்ப அது தேவையாகிறது. இன்றைய தொழில்நுட்ப விஞ்ஞான விருத்தி பரந்த உலகினை ஒரு சிறு பூகோளக் கிராமமாக்கிவிட்டது. தொலைபேசி பல்லாயிரம் மைலகளுக்கப்பால் உள்ளவரை நெருங்க வைத்து விட்டது என்றால், இணையம் (Internet) அவரை அண்டை வீட்டுக்காரர் ஆக்கிவிட்டது. இணையத்தை ஒரு அட்சய பாத்திரம் என்போமா? அமுதசுரபி என்போமா? அது கேட்டது எல்லாவற்றையும் தேவைக்கு மேலாகவே தந்துவிடும் தன்மை வாய்ந்தது. இதற்குத் தேவையானது ஒரு கணனி, இணைய இணைப்பு சுட்டி அல்லது சுண்டெலி (Mouse). போகிற போக்கைப் பார்த்தால் ஒவ்வொரு வீட்டிலும் ஆளுக்கொரு கணனி மிக விரைவில் வந்துவிடும். இப்போ செல்லிடப்பேசி (Cell Phone) மாதிரி விரைவில் கணனியும் காடு மேடெல்லாம் நம்மோடு ஒட்டி உறவாடியபடி உலா வரும். ஆனால் 'அலிபாபா திறந்திடு சீசேம்' என்றதும்தான் குகைக்கதவு


> ...அடுத்து மிக முக்கியமானதும், சர்ச்சைக்குரியதுமான விடயம் நமது ஆலயங்களில் நடைபெறுகின்ற வழிபாடு, ஆராதனை முறைகளில் மாற்றம் கொண்டுவருதல் மிக அவசியம். கோவில் பூசைகளும், ஏனைய சமய சம்பிரதாய நிகழ்வுகளும் முழுமையாகத் தமிழிலேயே நடத்தப்படல் வேண்டும்...

திறக்கும். அட்சயபாத்திரம் அல்லல் படுவோருக்கு உணவு படைக்கும். ஆனால் அதனோடு உறவாட மணிமேகலையால்தான் முடியும். மணிமேகலைக்கு மணிமேகலா தெய்வம் என்ன சொல்லியது?

*சிறந்த கொள்கைச் சேயிழைக் கேளாய்*
*மக்கள் யாக்கை உணவின் பிண்டம்*
*இப்பெருமந்திரம் இரும்பசி அறுக்கும் என்று*
*ஆங்கது கொடுத்து ஆங்கு எழுந்து*
*நீங்கியதாங்கு நெடுநிலைத் தெய்வம்.*

### அட்சய பாத்திரம்

ஆம் இணையம் என்னும் அட்சய பாத்திரம் அறிவுப் பசியை அறுக்கும். எனினும் அதற்கு வேண்டியது கட்டளை அல்லது பெருமந்திரம். அது தரும் தகவல் முழுவதுமே ஆங்கிலத்திலேயே இருக்கும். அறிவு வளர்ச்சியோ அபரிமித வேகத்தில் செல்கிறது. எனவே இன்றைய தகவல்கள் நாளைய பழைய செய்திகள் ஆகிவிட புதிய தகவல்கள் மிளிர்கின்றன. எனவே உலக அரங்கிலே ஆங்கிலத்தின் ஆக்கிரமிப்பை எதிர்கொள்ள இன்னொரு மொழி இருத்தல் சாத்தியமில்லை என்பதே உண்மை. எனவே சென்ற நூற்றாண்டின் வடமொழிக்கும், இலத்தீனுக்கும் ஏற்பட்ட கதி இந்த நூற்றாண்டில் தமிழுக்கும் நேரமாட்டாது என்பதற்கு என்ன உத்தரவாதம்? கணனியில் தமிழ் புகுத்தப்பட்டிருப்பதால் தமிழ் அழிவில் இருந்து காப்பாற்றப்படும் என்ற கவிப்பேரரசுவின் வாதம், காதால் கேட்க இதமாக இருக்கிறதே அன்றி




யதார்த்தமானதாக இல்லை என்பதை மனவருத்தத்துடன் ஏற்கவே வேண்டும். கணனியில் தமிழ் புகுந்தால் மட்டும் போதுமா? அறிவியல், தொழில்நுட்பவியல், மருத்துவம் சம்பந்தமான அறிவு விருத்தியின் வேகத்திற்கு ஆங்கிலம்போல் தமிழும் ஈடுகொடுத்து எடுத்துக் கூறமுடியுமா? பாரதி அன்றே சொல்லிவிட்டான்.

*புத்தம் புதிய கலைகள் - பஞ்ச*
*பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்*
*மெத்த வளருது மேற்கே - அந்த*
*மேன்மைக் கலைகள் தமிழில் இல்லை.*

*சொல்லவும் கூடுவதில்லை - அவை*
*சொல்லுந் திறமை தமிழ்மொழிக் - கில்லை*
*மெல்லத் தமிழ் இனிச் சாகும் - அந்த*
*மேற்கு மொழிகள் புவிமிசை யோங்கும்.*

*என்றந்தப் பேதை உரைத்தான் - ஆ!*
*இந்த வசை எனக் கெய்திடலாமோ?*
*சென்றிடுவீர் எட்டுத் திக்கும் - கலைச்*
*செல்வங்கள் யாவுங் கொணர்ந் திங்கு சேர்ப்பீர்!*

பாரதியின் ஆதங்கம், இணைய யுகத்திற்கு முந்தியது. உலக அரங்கிலே இன்றைய அளவு ஆக்கிரமிப்பை ஆங்கிலம் கொள்ளாதிருந்த காலத்திற்குரியது. 'கொன்றிடல் போலொரு வார்த்தை கூறத்தகாதவன் கூறினான் காண்பீர்' என்று குமுறுகிறான் பாரதி. கூறியவன் மிலேச்சனாய் இருக்கலாம். கூற்று உண்மை செறிந்தது என்பதை யாரும் மறுக்க முடியாது. தமிழுக்கு மாத்திரமல்ல இன்னும் பல மொழிகளுக்கும் இதே நிலைதான் என்பது உண்மை. பொருளாதார விருத்தி அடைந்த நாடுகளாகிய G-7 நாடுகள் ஏழில் மூன்று ஆங்கிலம் கோலோச்சும் நாடுகள். ஏனைய யப்பான், ஜேர்மனியில் ஆங்கிலம் கட்டாய பாடம். மற்றைய நான்கில் வெவ்வேறு மொழிகள் பேசப்பட்டாலும் கூட அவை பொருளாதார விருத்தியுற்றமையினால் ஆங்கிலத்துக்கு ஈடுகொடுக்க முடியும் எனினும் அந்த நாடுகளில் ஆங்கிலம் கட்டாய இரண்டாவது பாடமாக போதிக்கப்படுகிறது. அதேபோன்று மக்கள் தொகை காரணமாக சீன மொழியும் ஓரளவு ஈடுகொடுக்க முடியும் என எண்ண இடமுண்டு. ஆனால் தமிழ்? 20ஆம் நூற்றாண்டிலே தமிழ் பேசாத தமிழர் தொகை கணிசமான அளவிலே அதிகரித்துள்ளது. இவர்கள் எல்லாம் தொழில் தேடி ஆபிரிக்கா, அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் ஏன் ஏனைய ஆசிய நாடுகளுக்கும் சென்றவர்களின் வாரிசுகளே. இவர்கள் தொழில் பெறுவதற்கு தமிழ் மொழிகல்வி உதவவும் இல்லை. இவர்களும் தமிழைத் தெரிந்து வைத்திருக்க முயற்சியும் எடுக்கவில்லை. மலேசியத் தமிழர்களும், சிங்கப்பூர்த் தமிழர்களும் சிறிது வித்தியாசமானவர்கள். மூன்று, நான்கு தலைமுறை தாக்குப்பிடித்துவிட்டார்கள். அரசாங்கமும் ஒத்துழைப்பு நல்கியதால் அங்கு இதுவரை தமிழ் காப்பாற்றப்பட்டது.

ஆனால், அங்கேயும் இன்றைய இளைய தலைமுறையினர் பலர் தமிழ் பேசுகின்றார்களே அன்றி எழுத வாசிகக்த் தெரியாதவர்களாகவே உள்ளனர்.

### ஆங்கில மோகம்

தமிழ்நாட்டிலே ஆறு கோடி தமிழர்கள் உள்ளனர். ஆனால், உயர் மட்டத்தமிழர்கள் எல்லோரினதும் கனவு தம் பிள்ளைகளை மேலை நாடுகளுக்கு அனுப்பிவைப்பதே. எனவே அவர்கள் பாலர் பிரிவில் இருந்தே ஆங்கிலக் கல்வியிலேயே மோகமுடையவர்களாக உள்ளனர். ஆரம்பக்கல்வி தமிழிலே மாத்திரம் வழங்கப்படவேண்டும் எனக் கலைஞர் அரசு கொண்டுவந்துள்ள சட்டம் எத்தனை எதிர்ப்பினை நேர்கொண்டுள்ளது.

ஜெயலலிதா எதிராக அறிக்கை விடுகின்றார் என்றால் அவரின் எடு

## கணனியில் பயன்படுத்தப்படுவதால் மட்டும் தமிழ் காப்பாற்றப்பட்டுவிடுமா?

பிடிகளும் இதனை ஆதரிக்கின்றனர் என்றுதானே அர்த்தம்? ஆகவே தமிழ வழிக் கல்வி என்பது தமிழ் நாட்டைப் பொறுத்தமட்டிலே அடிநிலை ஏழைமக்களுக்கேதான் அல்லாமல் உயர் மட்டத்தோருக்கல்ல. மேலும் தொழில்சார்பாக வேறு மாகாணங்களிலே குடியேறிய தமிழ்நாட்டு தமிழர்களின் வாரிசுகள் தமிழை மறந்து நாளாகின்றன. ஓரளவிற்கு தமிழ்மொழி தன் தூயநிலையிலே காப்பாற்றப்படுகின்ற ஒரே நாடு. தமிழ் ஈழம் மட்டுமே . அங்கும் போராட்டம் முடிந்து தமிழ்ஈழம் கண்ட பின் யாது நடக்குமோ யாம் அறியோம்.

தொழில்சார்ந்த மொழியாகத் தமிழ் தாக்குப்பிடிக்கும் சாத்தியம் பற்றி இதுவரை சொன்னோம். எனவே அடுத்ததாக பண்பாடு சார்புடைய மொழியாகத் தமிழ் அழிவைத் தாங்கிக் கொள்ளமுடியுமா எனப் பார்ப்போம்.

பண்பாடு என்பது கடைப்பிடிக்கும் விழுமியங்கள், கற்றுக் கொள்ளும் கவின் கலைகள், கையாளும் சமய அனுஷ்டானங்கள் மூலம் பிரதிபலிக்கப்படலாம்.

### மாறும் விழுமியங்கள்.

விழுமியங்கள் தலைமுறைக்குத், தலைமுறை, மாறுகின்றன. இடத்துக்கிடம் வேறுபடுகின்றன; முரண் ஏற்படுகின்ற பொழுது தலைமுறை இடைவெளியெனக் கூறிப் பிரச்சினையைத் தவிர்த்துக் கொள்கின்றோம். விழுமியம் பேணலில் மொழி ஒன்றும் பெரிய பங்கேற்பதில்லை. கவின் கலைகளிலே சிறப்பாக ஆடல் பாடலுக்கு மொழி அவசியமாகிறது. தொன்று தொட்டே இங்கு பிறமொழி ஆதிக்கம் நிறையவே இருந்து வருகிறது. தியாகையர், முத்துசாமி தீட்சிதர், சியாமா சாஸ்திரி என்ற சங்கீத மும்மூர்த்திகள் கீர்த்தனைகள் ஒன்றுமே தமிழில் இருந்ததில்லை. இசைவாணர்கள் இவர்களுக்கு முதலிடம் கொடுத்தமையால் கோபாலகிருஷ்ணபாரதியோ, ஊத்துக்காடு வெங்கடகவியோ பெரும் அளவிலே ஆதிக்கம் செய்ய முடியவில்லை. சென்ற நூற்றாண்டின் நடுப்பகுதியிலே செட்டி நாட்டரசர் அண்ணாமலைச் செட்டியார், பாரதியார், கல்கி, இராஜாஜி, பாரதிதாசன் போன்றோரின் நன்முயற்சியால் தமிழ் இசைக்குச் சற்று கௌரவம் ஏற்பட்ட போதிலும் இன்றும் பல மேடைகளிலே தெலுங்கு, சமஸ்கிருதக் கீர்த்தனைகளே கச்சேரிகளின் பிரதான அங்கமாகின்றன என்பதை மறுப்பதற்கில்லை. ஆனாலும் ஒன்றில் சந்தோஷப்படலாம். தமிழ்நாட்டிலே தெலுங்கு, சமஸ்கிருத கீர்த்தனைகளைத தமிழிலேயே எழுதி மனனம் செய்கிறார்கள். இந்த நிலை வெளிநாடுகளில் தலைகீழாய் மாறிவிட்டதைக் காணமுடி கிறது. வெளிநாடுகளில் வாழ்கின்றவர்களின் பிள்ளைகள் பெரும் அளவிலே கவின் கலைகள் கற்கவே செய்கின்றனர். ஆனால் இவர்களுக்கு கற்பிக்கின்ற ஆசிரியர்கள் தமிழ் பாடல்களை ஆங்கிலத்திலேயே எழுதிக் கொடுக்கிறார்கள். இந்த நிலை தொடருமானால் முதலில் மறையப்போவது தமிழ் எழுத்துக்களே. வேறு பல மொழிகள் தமது எழுத்துக்களாக உரோமன் எழுத்துக்களைக் கைக்கொண்டது போன்று தமிழும், தமிழ் எழுத்துக்களைக் கைவிட்டு, உரோமன் எழுத் துக்களை பாவிக்கின்ற நிலை மிக விரைவில் வரலாம்.

தென்ஆபிரிக்காவில் சுற்றுப் பயணம் செய்த ஒருவர் - சிவசங்கரி என எண்ணுகிறேன் - அங்கே தமிழ் எழுத, வாசிக்க, பேசத் தெரியாத தமிழர்கள் தமிழில் தேவாரம் பாடித் துதிப்பதாக எழுதி இருந்தார். இதே போன்று மேற்கிந்தியத் தீவுகளிலும் தமிழில் தேவாரம் பாடுகின்ற தமது வேர்கள் பற்றித் தெரியாத அப்பிராணிகள் பலர் உள்ளனர். ஆகவே தமிழ் என்று தெரியாமல் தேவாரங்கள், கர்நாடக இசைப்பாடல்கள் மூலம் தமிழ் தாக்குப் பிடிக்க முனைகிறது.

அப்படியானால் தமிழை அழிவில் இருந்து காப்பாற்ற முடியாதா? முயன்று பார்க்கலாம். இணையத்தில் ஆங்கிலத்துக்கு அடுத்ததாக ஆககிரமிப்பது தமிழ் என பெருமைப்பட்டாலும் அங்கேகூட நம்மவரின் சிறுபிள்ளைத்தனம் தெற்றெனத் தெரிகிறது. வானளாவிய ஆதிக்கம் செலுத்தும் ஆங்கிலத்துக்கு ஒரே ஒரு மென்பொருள்தான் (Software) உண்டு . ஆனால் தமிழுக்கோ இருபதுக்கும் மேல் எத்தனை ஆயிரம் எழுத்துக்களை (Fonts) உருவாக்கினாலும் ஒரு நியமமான மென்பொருள் உபயோகத்துக்குக் கொண்டு வரப்பட வேண்டும். இந்த நோக்கிலேயே தமிழ்நாட்டு அரசு 'இணையம் 99' என்ற கருத்தரங்கு நடத்தியது. அதன் விளைவாக கலைஞர் 99 என்ற பொதுமைப்பாடான மென்பொருள் உருவாக்கப்பட்டது. ஆனால் எழுத்துரு ஆக்குபவர்கள் 'கலைஞர் 99'இன்படி செயற்படுகிறார்களா என்பது சந்தேகம்.

### தமிழ்க் கல்வி

தமிழர்கள் குடியேறிய பெரும்பான்மையான நாடுகளிலே அந்நாட்டு அரசாங்கங்களின் அனுசரணையுடனோ அல்லது பொதுநல நோக்குடைய சங்கங்களின் மூலமாகவோ மற்றும் தனிப்பட்டோர் முயற்சியாலேயோ தமிழ் சிறார்கட்கு போதிக்கப்படுகின்றது.

இதில் கனடா முன்னோடியாக அமைந்துள்ளது. பல்கலைக்கழகம் புகுவதற்கு வேண்டிய 30 விசேட சித்திகளில் மூன்று தமிழாக அமையலாம். OACக்குத் தேவையான ஆறு விசேட சித்திகளில், ஒன்றினைத் தமிழில் பெற்றுக்கொள்ள முடியும். தமிழ்க் கலைகள், தொழில்நுட்பக் கல்லூரி, கத்தோலிக்க கல்விச் சபையின் ஆதரவுடனும், ரொரன்ரோ கல்விச்சபை, பீல் கல்விச் சபை, யோக் பிராந்திய கல்விச் சபை ஆகியனவும் விசேட சித்திக்கான தமிழ் வகுப்புகளை நடத்துகின்றன. தமிழ்க் கலைகள், தொழில்நுட்பக கல்லூரி, தமிழ்நாடு மனோன்மணியம் பல்கலைக்கழகத்தின் ஆதரவுடன் தமிழ்ப் பட்டப்படிப்புக்குரிய பாடபோதனை செய்கின்றதையும் இங்கே குறிப்பிடவேண்டும்.

**பொ. கனகசபாபதி**
*(முன்னாள் அதிபர் - புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனா கல்லூரி)*

இவைதவிர, சிறார்களுக்கான தமிழ் வகுப்புக்கள் ஒன்ராறியோ மாகாணத்தின் பல்வேறு பகுதிகளிலும், மொன்றியால், வான்கூவர் மாநிலங்களிலும் நடைபெறுகின்றன. இவை போன்று ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, சுவிஸ், ஜேர்மனி, பிரான்ஸ், ஐக்கிய அமெரிக்கா போன்ற இடங்களிலும் நடைபெறுகின்றன. ரொறன்ரோவிலும், ஆஸ்திரேலியாவிலும் பாடநூல்கள் ஆக்கப்பட்டுள்ளன. தமிழ் கற்பிப்பதற்காக பாப்பா பாரதி, தமிழ் ஆரம் போன்ற வடியோக்களும் தயாரிக்கப்பட்டுள்ளன. இவ்வளவும் போதாதா எனப் பலர் வினவலாம். கல்லில் நார் உரிப்பது என்பார்களே அதற்குச் சிறந்த உதாரணம்: சிறார்களுக்கு தமிழ் கற்பதற்கு அக்கறை இல்லை. பெற்றோர்கள் நிர்ப்பந்தத்தால் வருகிறார்கள். தமிழ் பாடசாலைக்கு அனுப்பியவுடன் தமிழ் கற்பதில் தம் பங்கு முடிவுற்றுவிட்டதாகப் பெற்றோர் கருதுகிறார்கள். அநேகமான வீடுகளில் வீட்டு மொழியாக ஆங்கிலம் வந்துவிட்டது. பெற்றோர்கள் பிள்ளைகளுடன் ஆங்கிலத்தில் கலந்துரையாடுகிறார்கள். அல்லது பெற்றோர்கள் தமிழில் பேச பிள்ளைகள் ஆங்கிலத்தில் பேச பேச்சுவார்த்தை மணிப்பிரவாளம் ஆகின்றது. எனவே பெரும்பாலான தமிழ்ப் பிள்ளைகளுக்குத் தமிழ் இரண்டாவது மொழியாகவே போதிக்கப்படவேண்டியுள்ளது.

ஒன்ராறியோ மாநில அரசு பாரம்பரிய கல்வி (Heritage Language) என்ற தத்துவத்தை அனைத்துலக மொழி (International Language) என மாறியுள்ளதின் அடிப்படைக் கொள்கையை இங்கே கூறுதல் அவசியம். ஆங்கிலம் தவிர பிறிதோர் மொழியினை ஒருவர் கற்பாராயின் கூடுதலான மக்களுடன் தொடர்பு கொள்ளல் சாத்தியம். எனவே, எமது பெற்றோர்கள் பிள்ளைகளுக்குத் தமிழ் கற்பிப்பதிலும் பார்க்க சீன மொழி, ஜேர்மன் மொழி போன்றவற்றைக் கற்பிப்பதால் கூடிய அனுகூலம் உண்டு எனக் கருதி அவ்விதம் கற்பிக்க முனைவார்கள். அப்படியானால் தமிழின் கதி?

புலம்பெயர்ந்த நாடுகளின் பெற்றோர்களில் நிறையவே தங்கி உள்ளது. தமிழ் வீட்டுமொழியாக மாற வேண்டும். மறந்தும் வீட்டில் தமிழ் தவிர வேறுமொழிகளில் பேசுதல் கூடாது. அமைப்புகள், சங்கங்கள், தொலைக்காட்சியில் சிறார்களுக்கான நிகழ்ச்சிகள் பல நடத்த வேண்டும்.

பரதநாட்டியம், கர்நாடக இசை கற்பிப்போர் பலருக்கு தமது கவின் கலையில் உள்ள அபிமானம் தமிழில் இல்லை என்பது வருத்தத்திற்குரிய செய்தி. தமிழ் இசைக்கு முக்கியம் கொடுத்து கற்பிக்க வேண்டும். ஒரு காலத்தில் போதிய தமிழ் இசைப் பாடல்கள் இல்லாதிருந்திருக்கலாம். இப்போ நிறையவே தமிழ் இசைப்

( 7ஆம் பக்கம் பார்க்க)

# கொழும்பிலிருந்து வர்த்தகத் தூதுக்குழு

கடந்த 2ஆம், 3ஆம் திகதிகளில் குடாநாட்டுக்கு மேற் கொள்ளப்பட்ட வெற்றிகரமான விஜயத்தின் அடுத்த கட்ட மாக, இலங்கைத் தேசிய வர்த்தக சங்கச் சம்மேளனத்தைச் சேர்ந்த 47 வர்த்தகப் பிரமுகர்கள் குடாநாட்டில் வர்த்தக உறவுகளை மேம்படுத்த பேச்சு நடத்துவதற்கென எதிர்வரும் 23ஆம், 24ஆம் திகதிகளில் யாழ். வருகிறார்கள்.

இத்தூதுக் குழுவினர் யாழ்.வர்த்தக சங்கத்திற்கும், யாழ்ப் பாணம் வர்த்தக சம்மேளனத்திற்கும் வருகைதர உள்ளனர். இவர்களைச் சந்திக்க விரும்புபவர்கள் மேற்படி இரு சம் மேளனத்தினருடன் தொடர்புகொண்டு தேவையான ஒழுங்கு களை மேற்கொள்ளவும். பல்வேறு வர்த்தகத் துறைகளைச் சார்ந்த பிரமுகர்கள் வரவுள்ளதால் அவர்களது நிறுவனங் களின் முகவர்களாகச் செயற்படவிரும்புவோர் இந்தச் சந் திப்பைப் பயன்படுத்திப் பயனடையுமாறு அழைக்கப்படுகின்ற னர்.

*மேலும் விவரங்களுக்கு:*

❖ திரு.ஆர்.ஜெயசேகரன்
தலைவர்,
*யாழ். வர்த்தக சங்கம்,*
*மே/பா. பொப்புலர் மோட்டோர் ஸ்ரோர்ஸ்.*

| கொழும்பு விலாசம்: | யாழ்ப்பாண விலாசம்: |
|---|---|
| *271, செட்டியார் தெரு,* | *270, ஸ்ரான்லி வீதி,* |
| *கொழும்பு - 11* | *யாழ்ப்பாணம்.* |
| தொ. பே. எண்: 434800/435732 | *தொ. பே. :021-2403* |
| தொலைநகல்: (944)475731 | *021-3535* |

❖ திரு.K.பூரணசந்திரன்
தலைவர்,
*யாழ்ப்பாணம் வர்த்த சம்மேளனம் & தொழிலகம்*
*மே/பா. புறமோட்டர்ஸ் என்ஜினியரிங் கம்.லிமிட்.*

| அலுவலகம்: | வதிவிடம்: |
|---|---|
| *844, பருத்தித்துறை வீதி,* | *124, இராசாவின் தோட்டம் வீதி,* |
| *நல்லூர்,* | *நல்லூர், யாழ்ப்பாணம்.* |
| *யாழ்ப்பாணம்.* (சி-21802) | தொ. பே. :021-3088 |

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 08 - 07 - 1999



இறப்பு 23 - 03 - 2002

## செல்வன் கணேசன் சஜீவன்

பற்று வைத்தே எம்மீது பாரினிலே இரண்டரை
ஆண்டுகள் மழலை பொழிந்தே கொடிய
புற்றுநோய் வடிவில் வந்த காலனவன் பிடியில்
அகப்பட்டுப் போனாயே சஜீவனே!
உன் ஆத்மசாந்திக்காய் ஆண்டவனை இறைஞ்சுகிறோம்.
*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!*

*"ராஜ் பவனம்"*
*கைதடி தெற்கு,*
*கைதடி.* (3027)

அப்பா, அம்மா
மற்றும் சகோதரிகள்.

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 14 - 03 - 1930



உதிர்வு 13 - 04 - 2000

தண்ணீர்த்தாழ்வு - கட்டுவன்

## திருமதி செல்லத்துரை சின்னம்மா

**("சீனி" அம்மா)**

*திதி: 22.04.2002*

ஆண்டுகள் இரண்டு ஓடி மறைந்தாலும் - அம்மா
ஆறவில்லை எம் துயரம்
உங்கள் ஆத்ம சாந்தியடைய எங்கள் கடவுளை
வேண்டுகின்றோம்.

என்றும் தங்கள் நினைவுடன்:
கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*குமரக்கோட்டம்,*
*கோண்டாவில்.* (2971)

# எழுதுநர் சேவைக்கு ஐவர் நியமனம்

யாழ்ப்பாணம்,ஏப்.22

அரசாங்க சேவையின் எழுதுநர்/ சுருக்கெழுத்தாளர் சேவைகளுக்கு ஆள்சேர்ப்புச் செய்யும் பொதுப்போட் டிப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப் படையில் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களில் 5பேர் நியமனம் பெற்றுள்ளனர்.

அவர்களின் பெயர் விவரம் வருமாறு:-

செல்வி பி.வினோதினி (புது வீதி, காரைநகர்), செல்வி எஸ்.நாகவதனா (பலாலி வீதி, யாழ்ப்பாணம்), செல்வி என்.டுஷியந்தினி (கோப்பாய் தெற்கு, கோப்பாய்), எஸ்.சுஜீவன் (கந்தர்மடம்), செல்வி சி.கவிதா (கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்).

மேற்குறிப்பிடப்பட்டவர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் வைபவம் எதிர்வரும் 25ஆம் திகதி வியாழக்கிழமை கொழும்பு - 07 இல உள்ள ரொறிங்ரன் சதுக்கத்தில் நடைபெறவுள்ளது என்றும் -

சம்பந்தப்பட்டவர்கள் தமக்குரிய அழைப்புக் கடிதங்களை இன்று திங் கட்கிழமை மாலை யாழ்.செயலகத் தில் பெற்றுக்கொள்ளலாம் என்றும் -

யாழ். அரச அதிபர் அறிவித்துள் ளார்.

(எ)

## இனிவரும் ....

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாடல்கள் உண்டு. ஆகவே தெலுங்கு, சமஸ்கிருதக் கீர்த்தனைகளை முற் றாகவே விட்டுவிடலாம். மேலும் புலம் பெயர்ந்த நாடுகளில் பாடல்களை ஆங்கிலத்திலோ வேறொரு மொழி யிலோ எழுதிக்கொடுப்பதை முற் றாக விட்டொழிக்கவேண்டும். கற்க வரும் மாணவர்களுக்கு முதற் சில வாரங்கள் தமிழ்மொழி கற்பிப்பது வரவேற்கத்தக்கது. ருஷ்யா, ஜப் பான் போன்ற நாடுகளுக்குக் கல்வி கற்கப்போகிறவர்களுக்கு முதலில் அந்நாட்டின் மொழிதானே கற்பிக்கப் படுகிறது. கவின்கலை கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு மொழிப்பற்றும் இருத் தல் அவசியம்.

14.03.2000த்து மின் அம்பலம் எனும் இணையச் சஞ்சிகையில் பிர பல எழுத்தாளர் அ.முத்துலிங்கம் 'புத்தாயிரத்தில் இன்றர்நெற்றும் தமி ழும்' என ஒரு கட்டுரை எழுதியுள் ளார். அதில் தமிழ் உச்சரிப்புப் பற் றிக் குறிப்பிட்டு, போகிற போக்கைப் பார்த்தால் இன்னும் பத்து வருடங் களில் வேறு ஒரு மொழி போன்று தமிழ் வந்துவிடும் என்கிறார்.

அடுத்து மிக முக்கியமானதும், சர்ச்சைக்குரியதுமான விடயம் நமது ஆலயங்களில் நடைபெறுகின்ற வழி பாடு. ஆராதனை முறைகளில் மாற் றம் கொண்டுவருதல் மிக அவசியம். கோவில் பூசைகளும், ஏனைய சமய சம்பிரதாய நிகழ்வுகளும் முழுமை யாகத் தமிழிலே நடத்தப்படல் வேண்டும். வடமொழிச் சுலோகங் கள் தமிழிலே கூறப்படும்போது எவ்வளவோ சுருக்கலாம் என்பது மாத்திரமல்ல. கிரியைகள் செய்ய எடுக்கும் நேரமும் பெருமளவில் குறை யும். சிறுவர், சிறுமிகளுக்கும் என்ன நடக்கிறது என்பது புரியும்.

ஒவ்வொரு ஆலயத்திலேயும் ஓதுவார், உபதேசியார் நியமிக் கப்பட வேண்டும். வெறுமனே குருக் கள் பூசை செய்வதோடு நில்லாமல், கிறிஸ்தவ ஆலயங்களில் நடைபெறு வதுபோல் ஓதுவார் தலைமையில் கூட்டுப் பிரார்த்தனை நடைபெற வேண்டும். 'பஜனை' என்று நான் இங்கு சொல்லமாட்டேன். புலம் பெயர்ந்த நாடுகளிலே பஜனை என்ற தும் சாயி பஜனையையே நினைக் கிறார்கள். போகிற போக்கினைப் பார்த்தால் அதுவும் ஒரு கிளைச் சமய மாகிவிடுமோ என ஐயுற வேண்டி உள்ளது. அவர் ஒரு மகான்; வணக் கத்துக்குரியவர். பஜனைப் பாடல்க ளும் பெரும்பாலானவை வடமொழி அல்லது தெலுங்கு. அவரது தாய் மொழி தெலுங்கு. எனவே அது அவரைப் பொறுத்த அளவில் நியாய மானதே.

அற்புதமான, ஆழமான கருத்துச் செறிவுடைய தேவார, திருவாசகங் கள் பாடப்படுவது குறைந்து கொண்டு வருவது வருத்தத்துக்குரியதே. தமிழ் வாழ வேண்டும். சமய உணர்வு வேண்டும். அது தமிழ் உணர்வோடு வரவேண்டும் என்றால் தமிழில் தேவார, திருவாசகங்கள் ஓதப்பட வேண்டும்.

☆

# 2ஆம் ஆண்டு நீங்காத நினைவலைகள்

அன்னையின் மடியில் 12 - 05 - 1981



ஆண்டவன் அடியில் 14 - 04 - 2000

## செல்வி கீதா சுப்பிரமணியம்

*(யாழ். சாவகச்சேரி இந்துக் கல்லூரி உயர்தர மாணவி)*

திதி: 22.04.2002 பூர்வபட்ச தசமி

ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

*பெரியமாவடி,*
*சாவகச்சேரி.* (3039)

அப்பா, அம்மா, சகோதரர்,
உறவினர், நண்பர்கள்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 27 - 05 - 1934



மறைவு 02 - 05 - 2001

அமரர் "சோதிடமணி" பிரம்மஸ்ரீ

## ஸ்கந்த. திருஞானசம்பந்தக்குருக்கள்

*(கோண்டாவில் சிவபூதவராயர் தேவஸ்தான முன்னாள் பிரதம குரு)*

அவர்களின் நினைவாக
"மகாளய சிரார்த்த நிருபணம்" என்னும் நூல் இன்று
(22.04.2002) திங்கட்கிழமை வெளியிடப்படுகிறது.

*திதி: 22.04.2002*

*பிரிந்தும் பிரியாத மறைந்தும் மறையாத*
*உங்களின் நினைவுகளில் நாம்*
*என்றென்றும் வாழ்ந்திடுவோம்!*

*ஊரெழு கிழக்கு,*
*ஊரெழு.* (3038)

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

# 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி

புவியில் 03 - 09 - 1909



விண்ணில் 26 - 04 - 1996

அமரர்

## விஸ்வலிங்கம் சிவசுப்பிரமணியம்

*(B.A., B.Sc. (லண்டன்), P.G.T., F.R.G.S., J.P.)*

*(முன்னாள் அதிபர் - ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, சுன்னாகம்)*

**எங்கள் குலவிளக்கே!**
**காற்றினிலே கலந்த உங்கள் உயிர்மூச்சு**
**இன்னும் எங்கள் அனைவரதும் நெஞ்சினிலே**
**வீற்றிருந்து வீசுகின்றது.**
**தினந்தோறும் உங்கள் புன்சிரிப்பு வதனம் காண**
**பாரினிலே பரிதவித்து ஏங்குகின்றோம்.**

*Dr.சுப்பிரமணியம் வீதி,*
*சுன்னாகம்.* (3018)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

மல்லாகம் புகையிரத நிலையத்திற்கு அருகிலேயுள்ள வீடும் புன்னாலைக்கட்டுவன் தெற்கு, மயிலங்காடு வீதியிலுள்ள கடையும் தோட்டமும் அதற்கு அருகாக 20 பரப்புத் தோட்டமும் ஏழாலை கத்தோலிக்க தேவாலயத்திற்கு அண்மையில் உள்ள 6 பரப்புக் காணி கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: திருமதி ம.தில்லைநடேசன்,109/4, மனிங் பிளேஸ், வெள்ளவத்தை. தொலைபேசி இல.502556. (C/21801)

நாய்களுக்குரிய Parvo Distemper ஊசி மருந்துகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (2967)

## தவறிவிட்டது

149/2, கதீற்றல் ஒழுங்கை, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திருமதி சுவர்ணலதா சுபேந்திரன் என்பவருடைய கைச்செயின் ஒன்று (2பவுண்) அருள ஆச்சிரமம், கோவில் வீதி முன் ஒழுங்கையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மேற்குறிப்பிட்ட விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (3044)

சுதுமலை அம்மன் கோயிலடியைச சேர்ந்த செல்வராசா ஜெயவிந்தன் என்பவரது தேசிய அடையாள அட்டை (இல.562142341V) கொடிகாமத்துக்கும் சாவகச்சேரிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் V.தம்பு, கல்லூரி ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவிலில் ஒப்படைக்கவும். (3049)

## கடை விற்பனைக்கு

பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தியில் உள்ள கடை ஒன்று விற்பனைக்கு உண்டு. தொடர்பு: வெ.சிவகுமார், 'கம்பளை இல்லம்', பருத்தித்துறை வீதி (வட்டக்குளம் முன்பாக), கட்டப்பிராய். (2991)

## நாடகம்

வானொலியில் "கதாலியைத்தேடி" நாடகம் கேட்டீர்களா? அதை எழுதிய அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் நூல்கள் 1.நாடகம் எழுதுவது எப்படி? 2.யாழ்ப்பாணமா? கொழும்பா? 3.யாழ்ப்பாணம் 4.இலக்கியக் கட்டுரைகள் 5.வீடற்றவன் நாவலின் விளக்கமும் விமர்சனமும் 6. ஒரு காதலின் கதை. (3052)

## திருமண சேவை

மணமகனா? மணமகளா? உள்நாடா? வெளிநாடா? எத்தகைய மணமக்களானாலும் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள். திரு.எம். பொன்னுத்துரை, ஹரேகிருஷ்ணா திருமண சேவை, பெரியமதவடி கே.கே.எஸ். வீதி, சுன்னாகம். (3056)

---

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்

22.04.2002



## செல்வன் உதயகுமார் அனுஷன்

பிரான்சில் வசிக்கும் உதயகுமார் - யசோதரா தம்பதிகளின் அருந்தவப் புதல்வன் அனுஷன் தனது முதலாவது பிறந்த நாளை இன்று திங்கட்கிழமை பிரான்ஸில் கொண்டாடுகின்றார். இவரை பிரான்ஸில் உள்ள அப்பா, அம்மா, ஜெயபால் மாமா, அராலி வடக்கில் இருக்கும் அப்பப்பா, அப்பம்மா, ஞானா அத்தை, யாழ்ப்பாணத்தில் இருக்கும் ஜெயா அத்தை, விக்னேஸ் மாமா, தாத்தா, அம்மம்மா, ரதிச் சித்தி, கனடாவில் இருக்கும் ராசா சித்தப்பா, மஞ்சுச் சித்தி, லண்டனில் இருக்கும் தயா அத்தை, சிவா மாமா, காந்தன் மாமா, அராலி மாதங்கி மச்சாள் ஆகியோர் சந்நிதி முருகன் அருளாலும் செட்டியாமடம் வீரகத்திப் பிள்ளையார் அருளாலும் பல்கலையும் கற்று சீரும் சிறப்புடனும் நீடுழி வாழ வாழ்த்துகின்றனர்.

அராலி. (C/21810) மகேந்திரன் (அப்பப்பா)

---

# புதுக்கடைத் திறப்புவிழா அழைப்பு

**அன்புடையீர்,**

நிகழும் சித்திரபானு வருஷம் சித்திரை மாதம் 9ஆம் நாள் இன்று (22.04.2002) திங்கட்கிழமை நண்பகல் 11.00 மணி முதல் 1.34 மணிவரையில்வரும் ஆயிலிய நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய சுபமுகூர்த்தத்தில்,

**காரைநகர் வேம்படி வீதியில்**

**கண்ணன் ஸ்ரோஸ்**

என்னும் ஸ்தாபனத்தை இறைவன் திருவருளை முன்னிட்டு ஆரம்பித்து நடத்தவுள்ளதால் அத்தருணம் அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரும் வருகைதந்து விழாவைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*தங்கள் நல்வரவை நாடும்:*

**சோ.திருநீலகண்டசிவம்**
**வேம்படி வீதி, காரைநகர்.**

**கண்ணன்**

(C/21805)

---


# வெகுவிரைவில்

# யாழ் நகரில்

## வெற்றிடங்கள்

| | | |
|---|---|---|
| காப்புறுதிப் பிரதிநிதிகள் | - | ஆயுள் காப்புறுதி |
| Insurance Representatives | - | Life Insurance |
| அபிவிருத்தி அலுவலர்கள் | - | ஆயுள் காப்புறுதி |
| Development Officers | - | Life Insurance |
| விற்பனை அதிகாரிகள் | - | ஆயுள்/பொதுக் காப்புறுதி |
| Sales Executives | - | Life / General Insurance |
| உதவி முகாமையாளர்கள் | - | விற்பனை/கிளை நிர்வாகம் |
| Asst. Managers | - | Sales / Branch Management |

**வெகுமதிகள்:**
கவர்ச்சியான வருமான சந்தர்ப்பங்கள், மோட்டார் சைக்கிள்/வாகன கடன் வசதி, ஆயுள் காப்புறுதி, மாதாந்த/வருடாந்தப் போட்டிகள், முன்னேற்ற வாய்ப்புகள்.

**ஆகக் குறைந்த தகைமைகள்:**
கல்விப் பொதுத்தராதர உயர்தரம் (G.C.E. A/L), மிகச் சிறந்த தொடர்பாற்றல் திறமை, அதிகளவு உழைக்கும் ஆர்வம் இருத்தல் வேண்டும், முன்னனுபவம் அவசியம் இல்லை.
மேற்குறிப்பிடப்பட்ட வெற்றிடங்களுக்கு பட்டதாரிகளும் விண்ணப்பிக்கலாம்.

தேர்வு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு முழுமையான பயிற்சி வழங்கப்படும். சுயவிவரக்கோவை, சான்றிதழுடன் 25.04.2002 காலை 9.30 முதல் பி.ப. 3.00 மணிவரை, பாஸ்தியான் ஹோட்டல் [Bastian Hotel], கண்டி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு நேரில் வரவும்.

**யூனியன் அஷ்யூரன்ஸ்**
ஆயுள் முழுவதும் உங்களைக் காப்போம்

(C/21809)


---

# அறிவித்தல்

இத்தால் சகலரும் அறிக! யாழ்ப்பாணம் - காரைநகர் பிரதான வீதியில் மானிப்பாய் இலங்கை வங்கிக் கிளைக்கு எதிர்ப்புறமாகவும் ஜோய் "பார்மஸி"க்கு வடக்குப் புறமாகவும் அமைந்துள்ள திசைதறையும் திசைதறை வளவும் நிலப்பரப்பு 1 27/64 என்ற ஆதனம் மானிப்பாயைச் சேர்ந்த தற்போது வவுனியாவில் வசிக்கும் செல்வநாயகம் பாலச்சந்திரன் ஆகிய எனக்கே சொந்தமும் உரித்தும் ஆனதாகும். இவ்வாதனத்தில் வேறு எவருக்கும் சொந்தமோ உரித்தோ கிடையாது எனவும் இதனால் அறிவிக்கப்படுகிறது.

தகவல்தருபவர்:
திரு.செல்வநாயகம் பாலச்சந்திரன்
*ஆஸ்பத்திரி வட்டம் வீதி, வவுனியா.*

(3037)

---


# பராமரிப்பும் திருத்துதலும்

- போட்டோ பிரதி இயந்திரம்
- றோணியோ இயந்திரம்
- தட்டச்சு இயந்திரம்
- ரி.வி., டெக், றேடியோ

**முதலியனவும் மற்றும் சகல விதமான மின்னியல், இலத்திரனியல் சாதனங்களும் தகுதிவாய்ந்தவர்களினால், உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும்.**

**யூரோவில் எலக்ரோனிக்ஸ் (தவது)வது**
**Euroville Electronics (Pvt.) Ltd,**
*51, யமுனா வீதி, நல்லூர்.*
தொலைபேசி: 021-2849
*e-mail: eurovil@sltnet.lk*

(3035)


---

# முதலாம் வருட நினைவலைகள்

மலர்வு
04 - 01 - 1936



உதிர்வு
02 - 05 - 2001

## திருமதி இராசரத்தினம் பாக்கியம்

திதி: 22.04.2002

**எனது அன்புத் தெய்வமே!**
**ஆத்மா சாந்தி பெற பிரார்த்திக்கின்றேன்.**

பிரிவால் துயருறும்:
*எழுதுமட்டுவாழ் தெற்கு.* அன்புக் கணவர் இராசரத்தினம்.

(3040)

---

# மரண அறிவித்தல்கள்

## சுப்பிரமணியம் கனகரத்தினம்

மீசாலை மேற்கை பிறப்பிடமாகவும், தற்போது ஜேர்மனியில் வசித்தவருமாகிய சுப்பிரமணியம் கனகரத்தினம் 17.04.2002 புதன்கிழமை ஜேர்மனியில் அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் (அப்பையா) மற்றும் சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்புமகனும் நவரத்தினம், தங்கரத்தினம் (டென்மார்க்), செல்வரத்தினம் (சண்முகம்), குணரத்தினம் (ஜேர்மனி), அருளானந்தம் (டென்மார்க்), கெங்காதரம் (லண்டன்), கிருபசாந்தினி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*மீசாலை மேற்கு,*
*மீசாலை.*
(3053)
*தகவல்*
ராஜன் *(மைத்தனர்)*

## சபாரத்தினம் ஜெகநாதன்

இமையாணன், உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் சித்தன்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட சபாரத்தினம் ஜெகநாதன் 20.04.2002 சனிக்கிழமை காலமானார்.

இன்று (22.04.2002) திங்கட்கிழமை நடைபெறவிருந்த அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (23.04.2002) .செவ்வாய்க்கிழமை 1.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக சங்கானை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சித்தன்கேணிச் சந்தி,*
*சித்தன்கேணி.*
(3051)
*தகவல்:*
இரத்தினவதனி *(வதனி)*

## கதிரவேலு சிவபாதசுந்தரம்

(ஓய்வுபெற்ற நெற்சந்தைப்படுத்தும் உதவி அதிகாரி)

சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு சிவபாதசுந்தரம் 20.04.2002 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் மனோன்மணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - கோமதிஅம்மா தம்பதிகளின் அன்புமகனும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - வாலாம்பிகை தம்பதியினரின் அருமை மருமகனும் கோமதி (அமெரிக்கா), ஸ்ரீகுமரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் மோகனராஜ், மகேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஷமிரா, கர்சிமா, ராஜ் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான செல்வரட்ணம், குமாரசுவாமி மற்றும் கணேஷ் (சிங்கப்பூர்), செல்வராணி ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற டாக்டர் பகீரதனின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.04.2002) திங்கட்கிழமை மு.ப. 10.00 மணிக்கு அவரது கோமதி சித்தன்கேணி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்டர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:*
*கோமதி இல்லம்,*
*சித்தன்கேணி.*
(3048)
மனோன்மணி *(மனைவி*
திருமதி பகீரதன் *(சகோதரி)*

# ஐ.தே.மு. அரசின் முதல் 100 நாள்கள் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றினவா?

ஐ.தே.மு. அரசாங்கம் நாடாளுமன்ற ஆட்சியைக் கைப்பற்றி நூறு நாள்களுக்கு அதிகமாகிவிட்டன. கடந்த பத்தாம் திகதியுடன் முடிவடைந்த 100 நாள் துரித அபிவிருத்தித்திட்டம் எந்தளவிற்கு எதிர்பார்ப்புகளை நிறைவேற்றியிருக்கிறது?

- இதுதொடர்பாக ஆராய்ந்து அறிந்து அதனை அடிப்படையாகக் கொண்டு நாட்டின் எதிர்காலம் எப்படி அமையப்போகின்றது என்பதைக் கணிப்பிடுவது சுலபமாக இருக்கக் கூடும்.

இனப்பிரச்சினை விவகாரத்தில் முன்னேற்றம் இருப்பது தெரிகிறது. விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கு விதிக்கப்பட்டிருந்த அத்தியாவசியப் பொருள்களுக்கான தடைநீக்கப்பட்டது. பொருளாதார அபிவிருத்தி நடைபெறாத சண்டைப் பிரதேச மக்களில் பெரும் பகுதியினர் அவற்றைக் கொள்வனவு செய்யும் ஆறறல் இல்லாதவர்களாகவே இருப்பர் என்பது தனியான பிரச்சினை. அபிவிருத்திகள் ஏற்பட்டு பணப்புழக்கமும் ஏற்பட்டால் மட்டுமே பொருளாதாரத் தடையின் நற்பயன்களை மக்கள் அனுபவிக்கமுடியும்.

கொழும்பிலும் வேறு பகுதிகளிலும் வீதித்தடைகள் அகற்றப்பட்டன. பாஸ் நடைமுறை நீக்கப்பட்டன. பொலீஸ் பதிவுமுறை நிறுத்தப்பட்டது. யாழ்ப்பாணம் செல்வதற்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதி தேவை என்ற கெடுபிடி நீக்கப்பட்டது. கொழும்பு - யாழ்ப்பாணம் தரைவழிப்பாதை திறக்கப்பட்டுவிட்டது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டவர்களில் கணிசமான தொகையினர் மீது வழக்குத் தாக்கல் செய்யமுடியாது. அவர்களை விடுதலை செய்யவேண்டும் என்று அரசாங்கம் தீர்மானித்தது. ஏனையவர்களை அவரவரின் சொந்த மாவட்டத்திலுள்ள சிறைக்கூடங்களுக்கு மாற்றுவதென்றும் தீர்மானிக்கப்பட்டது. இதனால் அத்தகையவர்களது பெற்றோர், உறவினர் அவர்களைச் சென்று பார்ப்பதற்கு வசதியேற்படும்.

இதனையும் விட மீன்பிடித்தலில் முன்னர் இருந்த கட்டுப்பாடுகள் கணிசமான அளவு தளர்த்தப்பட்டுள்ளன. குண்டுவெடிப்பு, குண்டுவீச்சு, ஷெல் வீச்சு பற்றிய அச்சங்கள் மக்கள் மனங்களில் இருந்து அகன்றன. கொழும்பு - மட்டக்களப்பு ரயில் சேவை வெலிக்கந்தை வரையும் நீடிக்கப்பட்டது.

போர்நிறுத்தம் செய்யப்பட்டு அதனைக் கண்காணிப்பதற்கு ஸ்கன்டிநேவிய நாடுகளின் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. மேற்கொண்டு நடைபெறவேண்டிய பேச்சுக்களுக்கு முன்னாயத்தங்கள் செய்வதற்கென புலிகளின் ஆலோசகர் பாலசிங்கமும் வன்னிக்கு வரவமைக்கப்பட்டார்.

வடபகுதி மக்களின் மனங்களில் ஆறுதலையும் தென்பையும் ஊட்டும் விதத்தில் பிரதமரும், அமைச்சர்கள் பலரும் வவுனியாவுக்கும் யாழ்ப்பாணத்துக்கும் சென்று திரும்பியிருந்தனர். யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணமும் யுத்தத்தினால் அழிந்த பகுதிகளில் அபிவிருத்தியும் உறுதியளிக்கப்பட்டிருக்கின்றன.

## வேதர்

முழு இலங்கை மக்களும் பயனடையக்கூடிய விதத்திலும் திருப்தி அடையக்கூடிய விதத்திலும் நடவடிக்கைகள் நிகழ்ந்துள்ளன. வாழ்க்கைச் செலவு உயர்வைக் குறைக்கும் முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. மா, பாண், பால்மா வகை, அரிசி, சமையல் வாயு, எரிபொருள் போன்றவற்றில் சிறியளவு விலைகுறைப்பு ஏற்பட்டது.

சட்டத்தின் முன் எல்லோரும் சமமானவர்கள் என்பதை உணர்த்தும் வகையில் முன்னைய அரசாங்கத்தில் பெரும் பதவி வகித்தவர்கள் கூட சட்டத்தின்முன் நிறுத்தப்பட்டுள்ளனர். பெரும் இழுபறிக்குள் சிக்கியிருந்தாலும் இறுதியில் அரசமைப்பு சபையில் அவரால் நியமிக்கப்படும் ஆணைக்குழுக்களும் தயாராகிவிட்டன. நீதித்துறையில் தலையீடற்ற தன்மையும் நிர்வாகத்துறையில் பாகுபாடற்ற நிலைமையும் தோற்றுவிக்கப்படுகின்றன.

### வரவு - செலவுத் திட்டம்

இறுதியாக ஐ.தே.மு. தனது முதலாவது வரவு - செலவுத் திட்டத்தில் மக்கள் மீது புதிய சுமைகளை ஏற்றவில்லை. அதேவேளை இராணுவச் செலவினத்தையும் குறைக்கவில்லை.

முக்கியமாக பொருள்கள் சேவைகள் வரியையும், பாதுகாப்பு வரியையும் இல்லாமல் செய்திருக்கிறது. இது மக்களுக்கு பெரும் நிவாரணமாக இருக்கக்கூடியதாயினும் இதற்கு ஆயுள் குறைவு. ஜுலை மாதத்தில் இருந்து இவற்றுக்குப் பதிலான புதிய வரிமுறைகள் அறிவிக்கப்படவுள்ளன.

## யுத்தத்தால் அழிந்த பொருளாதாரத்தை சமாதானத்தால் மீட்கும் முயற்சி

மக்களுக்கு யுத்தப்பிரதேசச் செய்திகளை இதுவரை காலமும் வழங்கி வந்த பாதுகாப்பு அமைச்சின் கீழ் வரும் தகவல் பிரிவின் கடமைகள் 'சமாதானச் செயலகத்'திற்கு கைமாறியுள்ளமை நல்ல அறிகுறியாகும்.

பிரேமதாஸா ஆட்சிகாலத்தில் ஆரம்பிக்கப்பட்ட இந்நடைமுறை யுத்தம் நடைபெற்றுவந்த காலங்களுக்குப் பொருந்துவதாக இருந்தது. ஆனால் நிரந்தரப் போர்நிறுத்தம் என்று வந்துவிட்ட நிலையில் போர்க்களச் செய்திகள் இப்போது இல்லை.

வலிந்து பெறப்படக்கூடிய ஓரிரண்டு போர்நிறுத்த மீறல்கள், நிதி சேகரிப்பு, ஆள்திரட்டல் போன்ற செய்திகளே கிடைக்கின்றன.

இந்நிலையில் இத்தகைய செய்திகளை வெளியிடுவதற்கு போர்த்திணைக்களம் ஒன்றைவிட சமாதானத் திணைக்களமே பொருத்தமானது. அந்த வகையில் இதுவுமொரு நல்ல மாற்றமே.

சமாதானத்தையே மனங்களில் விரும்பினாலும், தில்லுமுல்லுகள், குழப்பங்கள், குழறுபடிகள், தோல்விகளை மக்கள் எந்நேரமும் எதிர்பார்த்த வண்ணம் இருக்கிறார்கள்.

நூறுநாள் துரித அபிவிருத்தித் திட்டம் முடிவுறும் தறுவாயில் சமாதான அபிவிருத்தியில் முட்டுக்கட்டை ஏற்பட்டிருக்கிறது.

திட்டமிட்டபடி மார்ச் 24ஆம் திகதி ஏ-9 பாதை திறக்கப்படவில்லை. ஏதோ வலிந்து பெறப்பட்ட சாக்குப் போக்குகள் கூறப்பட்டன. புதிய திகதி நிர்ணயிக்கப்பட்டது.

அதுவும்கூட வேலுப்பிள்ளை பிரபாகரன் வழக்கத்தில் தவிர்த்து வருகிற நம்பரில் அமைந்துவிட்டிருந்தது.

வீதி திறந்தது உண்மையே. ஆனால், 12 வருடங்கள் காத்திருந்த பின் மிகவும் தன்னடக்கத்துடன் நிறைவேறியிருக்கிறது. அமைச்சர்களுக்கும், பேருந்துகளுக்கு மட்டும் வரவேற்பு இருக்கவில்லை.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் அரசாங்க கட்டுப்பாட்டுப் பகுதியின் வாகனங்கள் தடங்கலின்றி போக்குவரத்தில் ஈடுபடும் அளவிற்கு சமாதான நடைமுறைகளில் இன்னும் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கவில்லை என்பதை காட்டும் நிகழ்வு இது. இவ்விடயத்தின் சுமுகமான தீர்வு ஏற்படாவிட்டால் மேலும் பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.

எப்படி இருப்பினும், அடுத்து வரும் 100 நாள்கள் சோதனை நாள்களாக இருக்கக்கூடிய நிலைமைகள் உள்ளன.

எதிர்ப்புக்களை தோற்றுவிக்க கூடியதான புலிகள் மீதான தடைநீக்கம், இடைக்கால நிர்வாகம் அமைத்தல், பேச்சுக்களுக்கான பேச்சு, அரசியற் பேச்சுகளும் அதற்குள் அடங்கக் கூடிய சர்ச்சைக்குரிய விடயங்களும் அதேவேளை, நாடாளுமன்றத்தின் ஆயுளை ஒரு வருடத்துக்கு அப்பாலும் நீடிக்க வைப்பதற்கு எடுக்கவேண்டிய ஐ.தே.முன்னணியின் முயற்சிகள் சுலபமானவை அல்ல. இவைகள் யாவுமே சர்ச்சைகளை தோற்றுவிக்கக் கூடியன.

யுத்தத்தினால் அழிந்த பொருளாதாரம் சமாதானத்தினால் செழிக்குமா? இந்தக் கேள்விக்கும் விடை காணவேண்டும்.

மொத்த தேசிய உற்பத்தி எதிர்மறையான புள்ளிவிவரத்தை காட்டிய போது யுத்தம் நிறுத்தப்பட்டது.

அபிவிருத்திக்குப் பணம் ஒதுக்க முடியாமல் ஆயுதக் கொள்வனவு செய்த முன்னைய கடன்களுக்கு வட்டி செலுத்துவதற்கு நிதி ஒதுக்குவதிலேயே வரவு - செலவுத்திட்டத்தின் கவனம் இருந்தது.

இந்நிலையில் சமாதானத்தில் ஏற்படும் முன்னேற்றங்களை உடனுக்குடன் வெளிநாடுகளுக்கு குறிப்பாக மேற்கு நாடுகளுக்கு அறிவிப்பதில் அரசாங்கம் கண்ணும் கருத்துமாய் இருப்பது தெரிகிறது.

அதிலும் வெளியுறவு அமைச்சர் காட்டும் கரிசனையை விட சமாதான செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள பொருளாதார விவகார அமைச்சரே தீவிரமாக உழைப்பதும் தெரிகிறது. சண்டையினால் சீரழிந்த பொருளாதாரத்தை சமாதான சுலோகங்களால் நிமிர்த்தி நிறுத்தும் பிரயத்தனங்கள் பயனளிக்கலாம்.

முதல் 100 நாள்களுக்குள்ளும் ஏற்பட்ட எதிர்ப்புகள் பெரும்பாலும் சட்ட மிரட்டல்களாகவும், சிணுங்கல்களாகவுமே இருந்தன.

"என்னிடம்தான் அதிகாரங்கள் இருக்கின்றன. ஜே.ஆர் பயன்படுத்திய அதிகாரங்களுள் 25 சதவீதத்தையே இதுவரை நான் பயன்படுத்தியிருக்கிறேன். இறுதி முடிவை எடுக்க வேணடிய பொறுப்பு என்னிடமே உண்டு" என்னும் விதமான மிரட்டல்களும் சிணுங்கல்களும் ஜனாதிபதியிடம் இருந்தன.

ஆனால், உள்ளூராட்சித் தேர்தலகளில் மக்கள் உச்சந் தலையில் ஓங்கி அடித்துவிட்டதால் அதிகாரபோதை அடங்கிப்போய்விட்டது.

*நன்றி: சுடர்ஒளி.*

---

# சமாதான முயற்சியின் குறைபாடுகளை சுட்டிக்காட்ட எம்.பிக்கள் குழு அமைப்பு

## பொ.ஐ.முன்னணிக் கூட்டத்தில் முடிவு

கொழும்பு,ஏப்.22

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தால் முன்னெடுத்துச் செல்லப்படும் சமாதான முயற்சிகளில் உள்ள குறைபாடுகளைச் சுட்டிக் காட்டவென, பொதுமக்கள் ஐக்கிய முன்னணி எம்.பிக்கள் குழுவொன்றை அமைத்துள்ளது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் மத்திய குழுக் கூட்டத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இவ்விடயம தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சமாதான முயற்சிகளுக்கு ஆதரவு வழங்கியவாறு சமாதான முயற்சியில உள்ள குறைபாடுகள், சந்தேகங்கள் குறித்து சுட்டிக்காட்ட இக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் புலிகள் மீதான தடைநீக்கம், இடைக்கால நிர்வாக சபை என்பன குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

புலிகள் மீதான தடையை அரசு எந்த அடிப்படையில் நீக்கப்போகினறது, இடைக்கால நிர்வாக சபையில் என்ன விடயங்கள் உள்ளடங்கப் போகின்றன என்பது குறித்து அரசு தெரிவிக்கவில்லை. ஆகவே, இது குறித்து அரசை விளக்கமளிக்குமாறு கூறுவது எனவும் முடிவு செய்யப்பட்டது.

இக்குழுவில் நிமால் சிறிபால டீ சில்வாவின் தலைமையில் ஜோன் செனவிரட்ன, மஹிந்த ராஜபக்ஷ, ரெஜினோல்ட் குரே ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். (ஐ-5)

# பெரியவர்களை மதிக்கும் பண்பு இளைஞரிடம் குறைந்து வருகிறது

## மத்திய கல்லூரி அதிபர் கவலை

யாழ்ப்பாணம்,ஏப்.22

பெரியோரை மதிக்கும் பண்பு இளம் தலைமுறையினிடையே அருகி வருகிறது.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். மத்திய கல்லூரி அதிபர் க.இராசதுரை.

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வுக்குத் தலைமை வகித்து உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

இளம் தலைமுறையினரிடையே குறிப்பாக மாணவர் சமூகத்தினரிடையே நாம் பரம்பரை பரம்பரையாகப் பேணிவந்த நல்ல பழக்க வழக்கங்கள் அருகி வருகின்றன. அத்துடன் எதையும் அழிவுக் கண்ணோட்டத்திலும், நாசச் செயற்பாடுகளிலும் நோக்குகின்ற மனப்பாங்கே அவர்களிடம் வளர்ந்து வருகின்றன.

வயது முதிர்ந்தோரைக் கனம் பண்ணுதல், ஆசிரியர்களின் வழி நடத்தல்களைப் பின்பற்றுதல், பெற்றோரின் புத்திமதிகளைச் செவிமடுத்தல் என்பனவும் மாணவர்களிடையே அருகி வருகிறது.

இந்த நிலையை மாற்றி இளைய தலைமுறையினரிடையே நல்ல பழக்கவழக்கங்களை ஏற்படுத்தும் வகையில் பாடசாலைகளில் பண்பாட்டுடன் கூடிய நிகழ்வுகள் நடத்தப்பட வேண்டும் - என்றார்.

இந்து, கிறிஸ்தவ மதகுருமாரும், பெற்றோரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். (எ)

# கப்பல் சேவைக்கு அனுமதி தரும்படி கோரிக்கை

நெடுந்தீவு,ஏப்.22

நெடுந்தீவு ப.நோ.கூ. சங்கம் புங்குடுதீவு, குறிகாட்டுவானில் இருந்து மன்னாருக்கான கடல் போக்குவரத்து சேவையை ஆரம்பிக்க கடற்படையின் அனுமதியைப் பெற்றுத் தரும்படி யாழ்.அரச அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் -

மன்னாருக்கான கடல்போக்குவரத்து சேவை ஆரம்பிக்கப்படும் பட்சத்தில் நியாயமான விலையில் பொதுமக்கள் தமது அத்தியாவசிய பாவனைப் பொருள்களைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்புகள் ஏற்படும் எனவும் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-11)

## பொறியியல் சேவைக்கு ஆள்சேர்ப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.22

இலங்கை பொறியியல் சேவையின் வகுப்பு II, தரம் II இற்குஆள் சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இலங்கை பல்கலைக்கழகமொன்றில் பெற்றுக்கொண்ட உரிய பொறியியல் பாடநெறிக்கான பொறியியல் பட்டமொன்று அல்லது வேறு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து அல்லது நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட பொறியியல் பட்டத்தை உடையவர்கள் இதற்கு விண்ணப்பிக்க முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பதவிக்கான விண்ணப்ப முடிவு திகதி எதிர்வரும் மே மாதம் 31ஆம் திகதியாகும். விண்ணப்ப முடிவு திகதியன்று 21 வயதுக்குக் குறையாமலும், 35 வயதுக்கு மேற்படாமலும் உள்ள விண்ணபதாரிகள் இதற்கு விண்ணப்பிக்க முடியும்.

மேற்படி விண்ணப்பம் தொடர்பான மேலதிக விவரங்கள் கடந்த 19ஆம் திகதிய அரச வர்த்தமானியில் பிரசுரமாகியுள்ளன. வர்த்தமானியின் பிரதியை யாழ்.கஸ்தூரியார் வீதியில் உள்ள 'அருண்ஸ் ஸ்போட்ஸ் ஸ்பொட்'டில் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம். (எ)

# புலிகளது பத்திரிகையாளர் மாநாடு அரசியல் முதிர்ச்சியை வெளிப்படுத்துகிறது

## பிரிட்டன் அமைச்சர் கருத்து

கொழும்பு,ஏப்.22

விடுதலைப் புலிகள் பத்திரிகையாளர் மாநாடு நடத்தியிருப்பது அவர்களின் அரசியல் முதிர்ச்சியை வெளிப்படுத்துகிறது.

- இவ்வாறு கூறியுள்ளார் பிரிட்டன் வெளிவிவகார அமைச்சர் ஜக்ஸ்ரோ. பிரிட்டன் நாடாளுமன்றில் இலங்கை தொடர்பாக எழுந்த கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இலங்கை பொதுநலவாய நாடு எனும்வகையில் அதன் வடபகுதியைக் கட்டியெழுப்புவதில் பிரிட்டன் உதவியளிக்கும். புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் கைச்சாத்திட்டுள்ள யுத்த நிறுத்தம் முழு அளவிலான சமாதான நடவடிக்கையாக முன்னெடுக்கப்படவேண்டும்.

சமாதான முயற்சிகள் வெற்றியடைய இலங்கை ஜனாதிபதியும் உதவவேண்டும் என்று பிரிட்டன் வலியுறுத்தும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ-5)

# நூலக ஆலோசனைக் குழுவின் கூட்டத்தை விரைவில் நடத்துக

## மாநகர சபை உறுப்பினர் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஏப்.22

நீண்ட நாள்களாகக் கூட்டப்படாதுள்ள யாழ்.பொது நூலக ஆலோசனைக் குழுவின் கூட்டத்தை உடனடியாகக் கூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மாநகர சபை உறுப்பினர் முத்துக்குமாரு தவநாதன் மாநகர முதல்வர் செல்லன் கந்தையனைக் கடிதம் மூலம் கேட்டுள்ளார்.

இது குறித்து அவர் எழுதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மேற்படி குழுவின் கூட்டம் கூட்டப்படாததால் நூலகம் தொடர்பான விடயங்களை அறியமுடியாதுள்ளது.

புனரமைக்கப்பட்டுவரும் பொது நூல் நிலையத்தை எதிர்வரும் மே மாதமளவில் திறந்துவைப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுவருகின்ற இவ்வேளையில், ஆலோசனைக் குழுவின் கூட்டத்தை உடனடியாகக் கூட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

புனரமைக்கப்படும் நூல் நிலையம் யாரால் திறந்து வைக்கப்பட வேண்டும் என்ற சர்ச்சையும் உருவாகியுள்ளதைத் தெரியப்படுத்துகின்றேன் - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## யோகாசன பயிற்சி

பெங்களூர் யோகேந்திரா யோகாசனப் பயிற்சி நிலையத்தின் ஆசிரியர் சிவாவினால் நடத்தப்படும் யோகாசனப் பயிற்சி வகுப்புக்கள் நல்லூர் கம்பன்கழக மண்டபத்தில் நடைபெறுகின்றன.

ஆண், பெண் இருபாலாரும் இந்த வகுப்புகளில் பங்குகொள்ளலாம். விடுமுறைக்காலத்தில் மாணவர்களின் வசதிகருதி வகுப்பு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ஒ-12)

## சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் சேர விரும்புவோருக்கு!

எதிர்வரும் 29ஆம் திகதி தொடக்கம் சொந்த இடத்தில் இயங்கவுள்ள சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்புகளில் புதிதாக சேரவிரும்பும் மாணவர்கள் எதிர்வரும் 29ஆம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறும் கல்லூரி அதிபர் கேட்டுள்ளார். (ஒ-4)

## நகர்களை விட்டு இராணுவம் வெளியேறியபோதும்
# அரபாத்தின் அலுவலகம் தொடர்ந்தும் இஸ்ரேலியர்களால் சுற்றிவளைப்பு!

ஜெருசலேம்,ஏப்.22

பலஸ்தீன நகரங்களான நப்லுஸ் மற்றும் ரமழாவில் இருந்து இஸ்ரேலியப் படைகள் வெளியேறியுள்ளன. ஆனால் ரமழாவில் பலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத்தின் தலைமையகம் அமைந்துள்ள கட்டடத் தொகுதி தொடர்ந்து சுற்றி வளைக்கப்பட்டுள்ளது. அங்கிருந்து யஸீர் அரபாத் வெளியேற அனுமதிக்கப்படவில்லை.

இந்த நகரங்களில் இருந்து - அரபாத்தின் வளாகம் தவிர்த்து - படைகள் அனைத்தும் முற்றாக வெளியேறிவிட்டதாக இஸ்ரேலிய அரசு பேச்சாளர் தெரிவித்தார்.

இந்தப் படை விலக்கல் நடவடிக்கை அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ. புஷ்ஷின் கடும் தொனியிலான எச்சரிக்கைக்குப் பின்னர் நடந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

படைவிலகல்

மூன்று வாரகால ஆக்கிரமிப்பின் பின்னர், இஸ்ரேலிய டாங்கிகளும் கவச வாகனங்களும் அங்கிருந்து வெளியேறிச் சென்றன.

மூன்று முக்கிய நிலைகளில் இருந்து இஸ்ரேலிய டாங்கிகள் வெளியேறி இஸ்ரேல் நோக்கிச் சென்றதாக நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.



அரபாத்தின் அலுவலகத்தை சுற்றிவளைத்து நிற்கும் டாங்கிகளையும் அவற்றை அவதானிக்கும் பலஸ்தீனச் சிறுவர்களையும் காணலாம்.

இந்தப் படை விலக்கல் [illegible] நேரத்திலேயே முடிந்துவிட்டதாக இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்[illegible]

எனினும், இஸ்ரேலிய சுற்றுலாத்துறை அமைச்சர் ரெவ்ஹம் ஸிவியின் கொலைக்குக் காரணமானவர்களைத் தம்மிடம் ஒப்படைக்கும்வரை அரபாத் மீதான முற்றுகை நீக்கப்படாது என்று இஸ்ரேலியப் பேச்சாளர் ரணன் கிஸ்ஸின் தெரிவித்தார்.

அரபாத்தின் அலுவலகக் கட்டடத் தொகுதிக்குள் தாம் தேடும் நபர்கள் இருப்பதாக இஸ்ரேலிய இராணுவம் குற்றஞ்சாட்டுகின்றது.

முன்னதாக, இஸ்ரேலியர்களால் குற்றவாளிகள் என்று தெரிவிக்கப்பட்டவர்களை பலஸ்தீன நீதிமன்றில் [illegible] செய்வதாக அரபாத் தெரிவித்த யோசனையை, இஸ்ரேல் மறுப்[illegible] (ம)

# சர்ச்சைக்குரிய நினைவிடத்துக்கு ஜப்பானியப் பிரதமர் திடீர் விஜயம்


டோக்கியோ,ஏப்.22

யுத்தங்களில் உயிரிழந்த ஜப்பானிய இராணுவத்தினரின் நினைவு ஸ்தலத்துக்கு நேற்று ஜப்பானியப் பிரதமர் யுனிஷிரோ கொய்சுமி திடீர் விஜயம் மேற்கொண்டார். இதே இடத்துக்கு கடந்த ஆண்டு கொய்சுமி சென்று திரும்பியமை, கடந்த நூற்றாண்டில் முதல் அரைப்பகுதியில் ஜப்பானின் ஆக்கிரமிப்பு மற்றும் மேலாண்மைக்குட்பட்ட வட, தென்கொரியாக்கள் மற்றும் சீனாவின் கடும் விமர்சனத்துக்கு உள்ளாகியிருந்த நிலையில் அவரது தற்போதைய விஜயம் இடம்பெற்றுள்ளது.

இரு கொரியாக்கள் உட்பட சில நாடுகளில் போர்க் குற்றங்கள் இழைத்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட ஜப்பானிய இராணுவ அதிகாரிகள் உட்பட போர்களில் உயிரிழந்த சுமார் 25 லட்சம் ஜப்பானியப் படையினரின் ஞாபகார்த்தமாக 'யசுகுனி' என்ற இந்த நினைவாலயம் அமைக்கப்பட்டுள்ளது.

ஜப்பானிய இராணுவ மேலாண்மையின் சின்னமாகக் கருதப்படும் இந்த நினைவாலயத்துக்கு கொய்சுமி செல்வது பெரும் சர்ச்சையைத் தோற்றுவித்துள்ளது.

கடந்த சில மாதங்களாக சீனா மற்றும் தென்கொரியாவுடனான ஜப்பானின் உறவுகள் சீர்குலைந்துள்ள



சர்ச்சைக்குரிய 'யசுகுனி' தேவாலயம்

நிலையில் கொய்சுமி தனது விஜயத்தின் மூலம் இனவாதத்தை வளர்க்க முயற்சிப்பதாக ஜப்பானிய எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டியுள்ளன.(ஒ)

# இஸ்ரேலால் ஏற்பட்ட அவலங்கள் வெளிச்சத்துக்கு வருகின்றன

ஜெருசலேம்,ஏப்.22

ஆக்கிரமித்த பகுதிகளில் இருந்து இஸ்ரேலிய இராணுவம் வெளியேறியதை அடுத்து அதன் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகளில் நிகழ்ந்த அவலங்கள் வெளியுலகுக்குத் தெரிய ஆரம்பித்துள்ளன.

பலஸ்தீன நகரான ஜெனினில் உள்ள அகதிமுகாமில் இடம்பெற்ற சம்பவங்கள் அங்கு நடந்த அவலங்களின் உச்சமாக இருக்கின்றன. 'ஆயிரக்கணக்கான அப்பாவி மக்களின் சோகம் அது' - என்று விவரித்தார் அமெரிக்காவின் உதவி இராஜாங்க அமைச்சர் வில்லியம் பேர்ன்.

ஆனால், ஜெனினின் சிறிய ஒரு பகுதியிலேயே மோசமான சம்பவங்கள் இடம்பெற்றன என்று இஸ்ரேல் கூறுகின்றது.

இந்த அகதிமுகாம், இஸ்ரேலின் ஆக்கிரமிப்பில் இருந்த 12நாள்களும் அங்கு என்ன நடந்தது என்று ஐ.நா. ஆராயவுள்ளது. இதற்கான அனுமதியை இஸ்ரேலிய அரசு வழங்கியுள்ளது.

இங்கு நடந்த சண்டைகளில் கொல்லப்பட்டவர்கள் அனைவரும் தீவிரவாதிகள் என்ற இஸ்ரேலின் கூற்றை பலஸ்தீனர்கள் அடியோடு மறுத்துவிட்டனர்.

இதற்கிடையில் ஜெனினின் ஒரு பகுதியில் இடம்பெற்ற சண்டையால் ஏற்பட்ட சேதங்கள் குறித்த புகைப்படங்களை [illegible] யிட்டுள்ளது.



ஜெனின் அகதி முகாமின் [illegible] காட்சி ஒன்று

# சீனா - ஈரான் இடையே உறவுகள் வலுக்கின்றன

தெஹ்ரான்,ஏப்.22

சீன அதிபர் ஜியாங் ஷெமின் உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டு ஈரானுக்குச் சென்றுள்ளதை அடுத்து இரு நாடுகளிடையேயுமான உறவுகள் மேலும் பலப்பட்டுள்ளன.

தலைநகர் தெஹ்ரானில் நேற்று நடந்த இரு நாட்டுத் தலைவர்களிடையேயான வரலாற்றுப் புகழ்மிக்க சந்திப்பில் இரு நாட்டு உறவுகளையும் மேலும் பலப்படுத்துவது என்று முடிவு செய்யப்பட்டது.



தெஹ்ரானில் ஷெமினும் கதாமியும்

1979 இல் ஈரானில் இஸ்லாமிய ஆட்சி நடைமுறைப்படுத்தப்பட்ட பின்னர் அங்கு விஜயம்செய்த முதலாவது சீன அதிபர் ஜியாங் ஷெமினே.

ஈரானின் தலைநகர் தெஹ்ரானில் வடக்கே உள்ள விமான நிலையத்தில் வந்திறங்கியதும் அவருக்கு அங்கு செங்கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது. ஈரானியப் பிரதமர் மொஹமட் கதாமி நேரில் சென்று சீன அதிபரை வரவேற்றார்.

இரு நாட்டுத் தலைவர்களிடையேயான பேச்சுக்களில் உலக அரங்கில் அமெரிக்காவின் வல்லாண்மை, ஆப்கானிஸ்தானின் மீள் புனரமைப்பு, சீன - ஈரான் எல்லை விவகாரம் என்பன முக்கிய இடம் வகித்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எண்ணெய், எரிவாயு, வர்த்தகம்,போக்குவரத்து, தகவல் தொடர்பு தொழில்நுட்பம், கல்வி ஆகிய ஆறு துறைகளில் இரு நாடுகளிடையேயும் ஒத்துழைப்பை அதிகரிக்கும் ஒப்பந்தம் ஒன்றிலும் இருநாட்டுத் தலைவர்களும் கையெழுத்திட்டனர்.

(ம)

## வானவேடிக்கை நிகழ்வின்போது
# அமெரிக்க போர் விமானம் வீழ்ந்து நொறுங்கியது!

அமெரிக்க கடற்படை விமானம் ஒன்று வீழ்ந்து நொறுங்கியதில் இருவர் உயிரிழந்தனர்.

கலிபோர்னியா நகரில் கடற்படை விமானங்கள் வான வேடிக்கை நிகழ்த்திக்கொண்டிருந்த போது இந்த விபத்து இடம்பெற்றது.

தாழப் பறந்து தாக்கும் கியூ.எவ் - 4 ரக பண்டொம் - 2 போர் விமானமே விபத்துக்குள்ளாகியது. பொயின்ட் முகா கடற்படை தளத்துக்கு அருகில் அது வீழ்ந்து நொறுங்கியது.



இடது மூலையிலுள்ள விமானமே விபத்துக்குள்ளானது

இயந்திரத்தில் ஏற்பட்ட கோளாறே இந்த விபத்துக்குக் காரணம் என்று முதற்கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்தது.

பொயின்ட் முகா தளத்தில் கடந்த இரு தினங்களாக இந்த விமானங்களின் வான வேடிக்கை நிகழ்வு இடம்பெற்று வருகின்றது. கடந்த வெள்ளியன்று இது ஆரம்பமானது. தொடர்ந்து மூன்று தினங்களுக்கு நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. விபத்தை அடுத்து இரு நாள்களுடன் அது நிறுத்தப்பட்டது.

இந்த விபத்தில் கடற்படை அதிகாரி மைக்கல் நோர்மன் (வயது39), விமானியான கப்டன் ஆன்ரு முவ் (வயது 31) ஆகியோரே உயிரிழந்தவர்களாவர்.

வானவேடிக்கை நிகழ்ந்து கொண்டிருந்தபோது திடீரென இரு விமானம் தீப்பற்றியவாறு கீழ் நோக்கி விரைந்ததைத் தான் கண்டதாக சம்பவத்தை நேரில் பார்த்த ஜிம் டிவிட் என்பவர் கூறினார். 'நாங்கள் நேரில் - உண்மையில் - இதனைப் பார்த்தோம். விமானத்தின் நடுப்பகுதியில் திடீரெனத் தீப்பிடித்தது. பின்னர் நெருப்புப் பிளம்பாக அது நிலம் நோக்கி விரைந்தது.

- என்றார் அவர். (ம)

# போதைச் செடி உற்பத்தியை தடுப்பதில் ஆப்கான் தீவிரம்

காபூல்,ஏப்.22

ஆப்கானில் போதைச் செடி உற்பத்தியைக் கட்டுப்படுத்துவதில் இடைக்கால அரசு மிகத் தீவிரம் காட்டி வருகின்றது. இதுவரை 94 தொன் நிறையுடைய ஓபியம் போதைச் செடிகள் அழிக்கப்பட்டுவிட்டதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். இதன் பெறுமதி 60 கோடி அமெரிக்க டொலர்கள் என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

தமது பொப்பி போதைச் செடி வயல்கள், அழிக்கப்படுவதால் ஆத்திரமடைந்த விவசாயிகள் வீதிகளில் இறங்கி அரசுக்கு எதிராகக் கோஷங்களை எழுப்பிப் போராடி வருகின்றார்கள்.

ஆனால், போதைச்செடி அழிப்பு நடவடிக்கை அமைதியாகவே நகர்ந்து வருவதாக ஆப்கானிய அரசின் பொருளாதார ஆலோசகர் அஷ்ரவ் ஹானி தெரிவித்தார்.

தலிபான் காலத்தில் பொப்பி பயிர்ச்செய்கை தடைசெய்யப்பட்டிருந்தது. ஆனால் பெரும் எண்ணிக்கையான விவசாயிகள் தெற்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் இவற்றை பெருமளவில் பயிரிட்டு வந்தனர்.

இடைக்கால நிர்வாகம் பதவியேற்றதையடுத்து இது மேலும் அதிகரித்தது. இதனால் அதனை முற்றாகத் தடைசெய்யும் நிலையேற்பட்டுள்ளது.



பொப்பி வயல்

உலகில் போதைப் பொருள் உற்பத்தியில் முன்னணி வகிக்கும் நாடுகளில் ஒன்றான ஆப்கானில் அது தடைசெய்யப்பட்டதையடுத்து உலக சந்தையில் போதைப் பொருளின் விலை அதிகரித்து வருகின்றது. (ம)

# நேற்று பிரெஞ்சு அதிபர் தேர்தல்

பிரான்ஸில் அதிபர் தேர்தலின் முதல் சுற்று வாக்களிப்பு நேற்று இடம்பெற்றது. தற்போதைய அதிபர் ஜக ஷிராக், பிரதமர் லயனல் ஜோஸ்பின் ஆகியோர் உட்பட 16பேர் இத்தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

அதிகரிக்கும் குற்றச் செயல்கள், ஊழல், ஓய்வூதியம், சமூகப்பாதுகாப்பு போன்றவை பிரசார விடயங்களாக உள்ள இத்தேர்தலின் இரண்டாம்கட்ட வாக்கெடுப்பு அடுத்தமாதம் 5ஆம் திகதி இடம்பெறும். முதல் சுற்று வாக்கெடுப்பில் முன்னணியில் உள்ள இருவர் மட்டுமே இரண்டாம் சுற்றில் போட்டியிடுவர்.

அந்த வாய்ப்பு, வலதுசாரி கட்சிகளைச் சேர்ந்தவர்களான அதிபர் ஷிராக் மற்றும் பிரதமர் ஜோஸ்பினுக்கு கிட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஒ)

# போட்டித் தலைவர்களிடையே மடகஸ்காரில் உடன்படிக்கை

செனேகல்,ஏப்.22

இந்து சமுத்திரத் தீவு நாடான மடகஸ்காரில் நாடு முழுவதும் வன்முறை பரவி வரும் நிலையில் அதிகாரப் போட்டியில் ஈடுபட்ட இரு தலைவர்களும் உடன்பாடு ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளனர்.

கடந்த டிசெம்பரில் நடந்த அதிபர் தேர்தலில் வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்ட அதிபர் டிடியர் ரட்சிராகாவும் - தேர்தலில் மோசடிகள் இடம்பெற்றதாகக் கூறித் தன்னைத்த தானே அதிபராக அறிவித்த மார்க் ரவலோ மனானாவும் - அதிபர் தேர்தலில் அளிக்கப்பட்ட வாக்குகளை மீண்டும் எண்ணுவதற்கு இணங்கி அதற்கான உடன்பாட்டில் கைச்சாத்திட்டுள்ளனர்.

செனேகலில் இந்த உடன்பாடு கைச்சாத்தானது. ஆபிரிக்க நாடுகள் சிலவற்றின் தலைவர்களது மத்தியஸ்தத்தில் இரு தலைவர்களும் நடத்திய பேச்சின் முடிவிலேயே இந்த உடன்பாடு எட்டப்பட்டது.

ரட்சிரேகா மற்றும் ரவலோமனானா ஆகியோரின் ஆதரவாளர்கள் இடையே இடம்பெற்றுவரும் வன்முறை மோதல் களில் இதுவரை 35 பேர் உயிரிழந் துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ)

# சீரான மீன் உணவுப் பழக்கம் இதய நோய்களைத் தடுக்கும்

## ஆய்வாளர்கள் தெரிவிப்பு

மீன்களை உணவாக உண்பதால் மாரடைப்பு கட்டுப்படுத்தப்படுகிறது. வாரத்தில் ஓரிரு தடவைகள் மீன் உணவை உண்பது மாரடைப்பால் ஏற்படும் திடீர்ச் சாவை மட்டுப்படுத்துகிறது என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

நமக்கு ஏற்படும் இதயத் தாக்கங்களைக் கட்டுப்படுத்த மீன்களில் காணப்படும் எண்ணெய் சிறந்த மருந்தாகும். அத்துடன் அது வளர்ச்சியடையும் உடலுக்கு வலிமையையும் சேர்க்கும். இதய நோயோ, இதயத் தாக்கமோ உள்ள ஒருவர் மீன் உணவை அதிகம் சாப்பிட்டு வந்தால் இதயநோய் 81 வீதம் குறைந்துவிட வாய்ப்புக்கள் உண்டு எனவும் அவர்கள் தெரிவித்தனர். (ஒ)


## தொலைபேசி இயக்குநர் தேவை

வேணுகா தொலைத்தொடர்பு நிலையம்,
964, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

மேற்படி நிறுவனத்திற்கு அனுபவம் வாய்ந்த பெண் தொலைபேசி இயக்குநர் உடனடியாகத் தேவை. 25வயதிற்குட்பட்ட க.பொ.த. (சா/த) சித்தியெய்தியவர்கள் 27-04-2002 அன்று காலை 10.00மணிக்கு சான்றிதழ்களுடன் நேரடியாகச் சமுகந்தரவும். கணனி, பக்ஸ், போட்டோப் பிரதி ஆகியவற்றையும் இயக்கத் தெரிந்திருக்கல் அவசியம். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

- உரிமையாளர்.

தொலைபேசி இல.: 021-2541
021-2845

(C/21826)


## அதிபர் பூரணம்பிள்ளை

அவர்களின்

## முதலாவது நினைவுதினம்

22-04-2002



ஹாட்லியின் மைந்தர்கள் அனைவரும்
அன்னாரது நினைவுநாளில்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போம்.

- செயற்குழு,
பழைய மாணவர் மன்றம்.

*பருத்தித்துறை.* (C/21824)

## ஜப்பானியக் குழு வருகிறது

கொழும்பு,ஏப்.22

ஜப்பானுக்கும் இலங்கைக்குமிடையில் ஏற்படுத்தப்பட்ட அரசியல் நட்புறவின் ஐம்பதாவது நிறைவு விழாவில் கலந்துகொள்ளுவதற்காக மூன்று நாள் விஜயத்தை மேற்கொண்டு ஜப்பானிய விசேட தூதுவர் ஹௌசி நொறொராவின் தலைமையில் ஜப்பானிய நாடாளுமன்ற தூதுக்குழு ஒன்று எதிர்வரும் 27 ஆம் திகதி இலங்கைக்கு வருகை தரவுள்ளது.

(ஐ)

## வெள்ளோட்டம்

யாழ்ப்பாணம்,ஏப்.22

தெல்லிப்பழை சித்தியம்பதி அருளமிகு அண்ணமார் தேவஸ்தானத்தின் புதிய இடபவாகனம் இன்று பிற்பகல் 2.30 மணியளவில் வெள்ளோட்டம் விடப்படவுள்ளது. (எ-12)

## கலாசார மண்டபம்

தென்மராட்சி,ஏப்.22

இடம்பெயர்ந்த மக்களுக்கென துன்னாலை வடக்கு கிராம அலுவலகர் பிரிவில் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதுவராலயத்தினரால் மூன்றரை லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட கலாசார மண்டப வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன.

மண்டபத் திறப்பு விழா விரைவில் நடைபெறுமென கிராம அலுவலகர் கா.சோ.சிவராசன் தெரிவித்தார்.

(ஐ-117)

## தேசிய கல்வி நிறுவக செயலமர்வுகள்

யாழ்ப்பாணம்,ஏப்.22

தேசிய கல்வி நிறுவகத்தில் யாழ். இந்துக் கல்லூரி நிலைய கல்வி டிப்ளோமா பகுதி I, பகுதி II ஆசிரிய மாணவர்களுக்கான செயலமர்வுகள் எதிர்வரும் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறுமென சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி த.வில்வநாதன் அறிவித்துள்ளார். (எ-13)

## வைத்திய அதிகாரி நியமனம்

சங்கானை அரசினர் வைத்தியசாலைக்குக் கடந்த வாரம் முதல் வைத்திய அதிகாரி அப்புத்துரை யோகராசா என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த பல வருடங்களாக ஒரு நிரந்தர வைத்திய அதிகாரி இவ் வைத்தியசாலையில் கடமை புரியாததால், நிர்வாகப் பொறுப்பைப் பல் வைத்தியர் திருமதி சந்திரிகா ஏற்றிருந்தார். இவ்வைத்தியசாலைக்கு ஒரு நிரந்தர வைத்திய அதிகாரி நியமனம் செய்யப்பட வேண்டுமென்று வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கம் பல வழிகளிலும் முயற்சி மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

(ஒ-29)


ராஜா யாழ்ப்பாணம்

விஜய், பிரியங்கா சோப்ரா, விவேக நடித்த

தமிழன்

காட்சிகள்:10.30,2.30,5.30 (பு.நே.)

ஆசனங்களை முன்கூட்டியே பதிவுசெய்து கொள்ளவும். (C/21396)


## அவசர கலந்துரையாடல்

இராமநாதன் நுண்கலைத்துறை அனைத்துவருட மாணவர்களுக்குமான அவசர கலந்துரையாடல் இன்று (22-04-2002) திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு இசைத்துறை மண்டபத்தில் நடைபெறவிருப்பதால் அனைத்து மாணவர்களையும் தவறாது சமுகம்தரும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

-கவின்கலை மன்றம்,
இராமநாதன் நுண்கலைப்பீடம்

(C/21823)

## முக்கிய அறிவித்தல்

எனது கணவரான காலஞ்சென்ற சின்னையா சிதம்பரநாதன் (பிரசித்த நொத்தாரிசு) அவர்களால் நிறைவேற்றப்பட்ட உறுதிகள் பல தற்போது என்னிடம் உள்ளன. இவற்றை எதிர்வரும் 01.06.2002 ஆம் திகதிக்கு (12.00 - 2.30 மணிவரை) பிந்தாமல் உரியவர்கள் என்னுடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

*நவரட்ணராஜா வீதி,*
*கோண்டாவில் மேற்கு,*
*கோண்டாவில்.* (3060)

திருமதி சறோஜினிதேவி
சிதம்பரநாதன்.

# மரண அறிவித்தல்கள்

## வல்லிபுரம் செல்லையா

**(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், Indian Overseas Bank)**

தோப்பு, அச்சுவேலி ஆஸ்பத்திரி வீதியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாவும் கொண்ட வல்லிபுரம் செல்லையா 19.04.2002 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் திருமதி இராசமணி (ஓய்வுபெற்ற ஆசிரியை) அவர்களின் அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் தம்பதியினரின் மூத்த மகனும் காலஞ்சென்றவர்களான பொன்னையா தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சிவகுமார் (Hatton National Bank) மற்றும் கணேசராசா (London), செல்வதாசன் (London), சிவனேஸ்வரி, (London), சரஸ் (London) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் வ.சின்னத்துரை (BDI - BURAHATHI & Co, Partner), திருமதி தி.இராசம்மா (America), காலஞ்சென்ற வ.இராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும் சிறிரஞ்சனா, கனகசுந்தரம் (London), லக்சுமி (London), விவேகானந்தராசா (London), அமிர்தா (London), ஆகியோரின் அருமை மாமனாரும் திருமதி கமலா, தில்லைராசா (World Bank Consultant), மீனா ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் அச்சுதன், அர்ச்சனா, சகீனா, கரேன், Guru, தாரணி, விக்னேஸ், Ajutan, திவ்வியா, Shalini, Arun ஆகியோரின் பாசமிகு பேரனும் கௌரி, உமா, ஆஷா ஆகியோரின் பெரிய தந்தையும் கந்தன், வேலன், முருகன், சந்திரகுமார், விஜயகுமார், சுமித்திரா, சுசீலா ஆகியோரின் பாசமிகு மாமனும் காலஞ்சென்ற பொ.சின்னத்துரை அவர்களின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.04.2002) திங்கட்கிழமை மு.ப.11.00 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ.இராசமணி
(மனைவி)

*ஆஸ்பத்திரி வீதி,*
*அச்சுவேலி.* (3061)

## கணபதி செல்லையா

**(அராலி வீதி, சங்கானை)**

அராலி வீதி, சங்கானையைச் சேர்ந்தவராகிய கணபதி செல்லையா 20.04.2002 சனிக்கிழமை இறைபதமெய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதி தம்பதிகளின் அன்பு மகனும் செல்லம் அவர்களின் அருமைக் கணவரும் இராசமணி (கனடா), கண்ணன் (சுவீடன்), சிறிதரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான நாகமுத்து, அன்னப்பிள்ளை, தம்பிமுத்து ஆகியோரின் அன்புச் சகோதரனும் சின்னப்பிள்ளை (அளவெட்டி), உரும்பிராயைச் சேர்ந்தவர்களான சின்னம்மா, இரத்தினம், இராசம்மா, சிவலிங்கம், இராசதுரை ஆகியோரின் அன்பு மைத்துனரும் இராசலிங்கம் (கனடா), கௌசல்யா (சுவீடன்), இராகினி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் கனடாவைச் சேர்ந்த இராசதீபன், இராசதீபா, இராசசுமி, ஜெனோசன் (சுவீடன்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.04.2002) திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்கானை கரைச்சி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ.கண்ணன (மகன்)
*அராலி வீதி,*
*சங்கானை.*

மனைவி,
மக்கள்.

(C/21825)


ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ!

## மூன்றாண்டு நிறைவுப் பூர்த்தியைக் காணும்

# பிரேம் நகைமாடம்



மென்மைக்கு மெருகேற்றும் இளமைக்கு எழிலூட்டும் தங்க நகையுலகில் மங்காப் புகழ்கொண்டு விளங்கிடும் ஒரே ஸ்தாபனம். ஓடர் நகைகளைக் குறித்த காலத்தில் செய்துகொடுத்து அனைவரிடத்தும் தன்னம்பிக்கை பெற்று விளங்குகின்றது.

இன்று (22-04-2002) திங்கட்கிழமை தனது மூன்று வருடப் பூர்த்தியை முன்னிட்டு தனது வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றது.

(3064)

*கடை விலாசம்:*
யாழ். வீதி, சந்தையடி,
மானிப்பாய்.

R.பிறேம்குமார்,
*தேவாலய ஒழுங்கை,*
*சுழிபுரம், ஆனைக்கோட்டை.*



நாகம்ஸ் சுன்னாகம்

இந்தியாவிலும் நாகம்ஸ் சினிமாவிலும் ஒரேதின வெளியீடு

ரொப்ஸ்டார் பிரசாந்த், சிம்ரன், வடிவேலு நடித்த

தமிழ் (நியூ)

காட்சிகள்:11.00,3.00,6.30 (பு.நே.) (2882)

லக்சுமி இணுவில்

சரத்குமார், அபிராமி, கவுண்டமணி நடித்த

சமுத்திரம் (நியூ)

(குடும்பச் சித்திரம்)

காட்சிகள்: 10.30,2.30 (ப.நே.) (3046)

நிரஞ்சனாஸ் சங்கானை

அஜித், ஷாலினி, ரகுவரன் நடித்த

அசோகவனம் (நியூ)

காட்சிகள்: 11.00, 2.30, 5.30 (புதியநேரம்.) (C-21806)

# வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாகம் இரு ஆண்டுகள் மட்டுமே புலிகளிடம்?

## அரசு பரிசீலிப்பதாகத் தகவல்

கொழும்பு,ஏப்.22

வடக்கு - கிழக்கு மாகாணத்தின் இடைக்கால நிர்வாகத்தை எவ்வளவு காலத்துக்கு விடுதலைப் புலிகளிடம் ஒப்படைப்பது என்பது தொடர்பாக அரசு உயர்மட்டத்தில் ஆராயப்பட்டு வருவதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

புரிந்துணர்வு உடன்படிக்கை மற்றும் இடைக்கால நிர்வாகத்தைப் புலிகளிடம் ஒப்படைப்பது போன்ற விடயங்களுக்கு தெற்கில் எதிர்க்கட்சிகள் மற்றும் இனவாத சக்திகள் மத்தியில் இருந்து எதிர்ப்புக்கள் கிளம்பி வருவதை அடுத்து -

விடுதலைப் புலிகளிடம் இடைக்கால நிர்வாகத்தை ஒப்படைப்பதற்கான காலப்பகுதியை தெளிவாக வரையறை செய்துகொள்ள அரசு விரும்புவதாகவும் -

இரண்டு வருடகாலப் பகுதிக்கு மட்டும் வடக்கு - கிழக்கு நிர்வாகத்தைப் புலிகளின் பொறுப்பில் விடுவது என்றும் -

அரசு உயர் மட்டத்தில் பரிசீலிக்கப்பட்டிருப்பதாக விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இடைக்கால நிர்வாகத்தை விடுதலைப் புலிகளிடம் அரசு ஒப்படைக்கும் விடயத்தில் இந்தியாவும் ஆழ்ந்த அக்கறை கொண்டுள்ளதாகவும் -

வடக்கு - கிழக்குப் பிரதேசத்தை நீண்டகாலம் புலிகள் நிர்வகிப்பது இந்தியாவுக்குத் திருப்தி அளிக்கும் விடயம் அல்ல என்றும் -

சில இராஜதந்திர வட்டாரங்கள் கூறுகின்றன.

இது விடயத்தில் இந்தியாவை அனுசரித்துச் செல்லும் நிலை பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுக்கு உள்ளது - என்று அந்த வட்டாரங்கள் கருதுகின்றன.

இதேவேளை -

இடைக்கால நிர்வாக சபையில் தமது கட்சிகள் இடம்பெறப்போவதில்லை என்று தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு அறிவித்துவிட்டது. ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியும் இடைக்கால நிர்வாக சபையில் அவ்வளவு அக்கறை காட்டவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. அண்மையில் விடுதலைப் புலிகளின் தலைவரோடு நடத்திய பேச்சுக்களின்போது இது குறித்து பிரஸ்தாபிக்கவில்லை என்று ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

வடக்கு - கிழக்கில் இரு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது கட்சியின் சார்பில் இருப்பதால் தமது கட்சிக்கும் இடைக்கால நிர்வாக சபையில் இடம்தர வேண்டும் என்று ஈ.பி.டி.பி. அரசிடம் கேட்டிருப்பதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. (ஐ-3)

## உண்ணாவிரதம் முடிவு

கொழும்பு,ஏப்.22

நீர்கொழும்பு சிறைச்சாலையில் தமிழ்க் கைதிகள் மேற்கொண்டு வந்த உண்ணாவிரதப் போராட்டம் நேற்றுக் கைவிடப்பட்டது.

கட்டுநாயக்க தாக்குதல் தொடர்பாகக் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள 2 பெண்கள் உட்பட 15 தமிழ்க் கைதிகள் உண்ணாவிரதம் மேற்கொண்டுவந்தனர்.

கைதிகளைச் சந்தித்து உரையாடிய அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சித் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான அ.விநாயகமூர்த்தி அளித்த உறுதிமொழியை அடுத்து உண்ணாவிரதம் கைவிடப்பட்டது.

மயக்கநிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த இரு கைதிகள் உடல்நலம் தேறியதை அடுத்து நேற்று மீண்டும் சிறைச்சாலைக்குக் கொண்டுவரப்பட்டனர். (ஐ-3)

### நாடுபிளவுபட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வித்துள்ளனர். அதன் பிரகாரம் செயற்பட வேண்டுமென வற்புறுத்தியுள்ள சர்வதேச சமூகத்தினருக்கு, புலிகள் பதிலளிக்க வேண்டிய நிலையில் உள்ளனர். நாட்டு மக்களில் பெரும்பாலானோர் யுத்தத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்கள். எத்தகைய அவசர நிலையையும் சமாளிக்கும் வகையில் ஆயுதப் படையினர் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர் - என்றார் பிரதமர்.

அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்கர் அதிசங்கைக்குரிய உடுகம ஸ்ரீபுத்திரகித்த தேரர், ஸ்ரீ நாகவிகாரையின் பிரதமகுரு சங்கைக்குரிய மீகேகந்துரு ஞானரத்ன தேரர், அமைச்சர்கள் ஜயலத் ஜயவர்த்தன, டபிள்யூ.ஜே.எம். லொக்குபண்டார, தியவதனநிலமே, நிரஞ்சன் விஜயரத்ன ஆகியோரும் அங்கு உரையாற்றினார்கள்.

கதிர்காமத்திலிருந்து நயினை ஸ்ரீநாகவிகாரை நோக்கிய இந்த சமாதானப் பாத யாத்திரை 20 நாள்களில் பூர்த்திசெய்யப்படும்.

"விகாரையில் புதிதாக அமைக்கப்பட்ட வழிபாட்டு கூடத்திற்கான கலசமும் இந்த பாதயாத்திரையின் போது வடக்கே எடுத்துச் செல்லப்படுகின்றது. (ஐ-9)

## எதிர்க்கட்சியைச் சேர்ந்த ஐவருக்கு அமைச்சர் பதவி?

கொழும்பு,ஏப்.22

ஐக்கிய தேசிய முன்னணி அரசின் இரண்டாவது அமைச்சரவை மாற்றம் அடுத்த மாதம் இடம்பெறவுள்ளது.

இந்த அமைச்சரவை மாற்றத்தின்போது எதிர்க்கட்சியில் உள்ள ஐவருக்கு அமைச்சர் பதவி வழங்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நாடாளுமன்றத்தில் எம்.பிக்கள் மனச்சாட்சிப்படி வாக்களிக்க வசதி செய்யும் அரசமைப்புச் சட்டத்திருத்தம் சபையில் நிறைவேற்றப்பட்ட பின்னரே அமைச்சரவை மாற்றம் இடம் பெறும் என்று அரசு மட்டத்தில் இருந்து அறியவந்தது.

கடந்த அரசில் அமைச்சர்களாக இருந்த ஐவருக்கு அமைச்சர் பதவி வழங்கப்படவிருக்கின்றது என்றும்-

அச்சமயம் பிரதிச் சபாநாயகர் பதவியும் நிரப்பப்படலாம் என்றும்-

கூறப்படுகிறது.

இதற்கிடையில் -

தற்சமயம் சபாநாயகராக இருக்கும் ஜோசப் மைக்கல் பெரேரா தனது பதவியை ராஜினாமாச் செய்துவிட்டு அமைச்சுப் பதவி ஒன்றை ஏற்பார் என்றும் தெரியவந்தது. (ஐ-3)

### மேதினக் கூட்டம் இல்லை

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி இவ்வாண்டு மேதினத்தைக் கொண்டாடத் தீர்மானிக்கவில்லை என்று முன்னணியின் நிர்வாகக்குழு உறுப்பினர்களில் ஒருவரான சமசமாஜக் கட்சியின் செயலாளர் பட்டி வீரக்கோன் தெரிவித்தார். (ஐ-8)

## வடக்கில் வாழ்ந்து வந்த சிங்களவரின் நிலை என்ன?

### மடுகந்த விகாரையில் நேற்று கூட்டம்

வவுனியா,ஏப்.22

வடபகுதியில் பல இடங்களிலும் இருந்து இடம்பெயர்ந்துள்ள சிங்களக் குடும்பங்களின் எதிர்காலம் தொடர்பாக ஆராய்வதற்கான கூட்டம் ஒன்று நேற்று மடுகந்தவில் உள்ள பௌத்த விகாரையில் விகாராதிபதி தலைமையில் நடைபெற்றது.

சிங்கள அமைப்புகளைச் சேர்ந்த பிரதிநிதிகளும் இடம்பெயர்ந்த சிங்களவர்களும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

வடக்கில் இருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்களை மீளக்குடியமர புலிகள் அனுமதித்துள்ளனர். இது தொடர்பாக முஸ்லிம் கட்சிகளின் பிரதிநிதிகளோடு புலிகளின் தலைவர்கள் பேச்சு நடத்தியுள்ளனர்.

வடபகுதியில் யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன்பு வாழ்ந்த சிங்களக் குடும்பங்கள் பல இன்று நாட்டின் வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந்து வசிக்கின்றன. இவர்கள் வடபகுதியில் தங்கள் சொந்த இடங்களில் சென்று குடியமர வசதிவாய்ப்பு ஏற்படுமா என்று அந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

வடக்கின் எல்லைப் பிரதேசங்களைச் சேர்ந்த சிங்களக் குடும்பங்களின் பாதுகாப்பு தொடர்பாகவும் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

வடக்கில் சிங்கள மக்கள் குடியமர்வதற்கு அனுமதிக்குமாறு கேட்டு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே.பிரபாகரனுக்கு கடிதம் ஒன்றை அனுப்புவது என்று கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

சிங்கள மக்களின் மீள் குடியமர்வு தொடர்பாக வெளிநாட்டு தூதரகங்களுக்கும் ஐக்கிய நாடுகள் சபைக்கும் மகஜர்களை அனுப்பவும் முடிவு செய்யப்பட்டது. (ஐ)

## புலிகள் மீதான தடையை அரசு இடைநிறுத்தும்?

கொழும்பு,ஏப்.22

விடுதலைப் புலிகளுடனான நேரடிப் பேச்சுக்கு வசதியாக அந்தப் பேச்சுக் காலத்தில் புலிகள் மீதான தடையை இடைநிறுத்தி வைப்பது தொடர்பாக அரசு ஆராய்ந்து வருவதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

பேச்சுக்களில் சுதந்திரமாக பங்குபற்ற வசதியாக தங்கள் அமைப்பு மீதான தடையை நீக்கவேண்டும் என்று விடுதலைப் புலிகள் கோரிவருவது தெரிந்ததே.

தடை நீங்கம் தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சட்டமா அதிபர் கே.சி.கமலசபேசனுடன் கடந்த வாரம் கலந்துரையாடினார்.

புலிகள் மீதான தடையை நீக்குவதற்கு சட்டத்தில் தடை ஏதும் இல்லை என்று சட்டமா அதிபர் பிரதமரிடம் தெரிவித்ததுடன், தமது ஆலோசனையை எழுதது மூலமும் வழங்கியுள்ளார்.

புலிகள் மீதான தடையை நீக்குவதற்கு தெற்கில் கடும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளதை அடுத்தே தடையை இடைநிறுத்தி வைப்பது தொடர்பாக அரசு ஆராய்ந்து வருகின்றது.

- என்று கூறப்படுகின்றது. (ஐ-3)

### சமாதான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரான தினேஷ் குணவர்த்தனா, தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவி பேரியல் அஷ்ரப், ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ ஆகியோர் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்வர்.

இதேவேளை -

புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு எதிராக தொடர்ந்து நடத்தப்படவுள்ள ஆர்ப்பாட்டங்களிலும் எதிர்ப்புக் கூட்டங்களிலும் பொது அமைப்புக்கள், பொது மக்கள் கூட்டாகக் கலந்துகொள்ள வேண்டுமென எதிர்க்கட்சி எம்.பிக்கள் கோரியுள்ளனர். (ஐ-எ)

### தரைவழியாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயன்பாட்டுக்கே எடுத்துவரப்பட்டுள்ளன.

சுகாதார அமைச்சினால் யாழ். போதனா வைத்தியசாலைக்குப் புதிதாக வழங்கப்பட்டுள்ள லொறி ஒன்றும் இங்கு எடுத்து வரப்பட்டுள்ளது.

இந்த லொறியை சம்பிரதாயபூர்வமாக வைத்தியசாலைப் பணிப்பாளரிடம் கையளிக்கும் வைபவம் இன்று காலை யாழ்.போதனா வைத்தியசாலையில் நடைபெறவுள்ளது.

இதற்காக சுகாதார அமைச்சர் இன்று காலை விமானம் மூலம் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வருவுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-6-9-139)

### குடாநாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளிகள் எமது அமைப்பின் அடையாள அட்டைகளை வைத்திருப்பர். தமது செயற்பாடுகளுக்குத் தேவைக்கு ஏற்ப அதனைக் காண்பித்தும் வருகின்றனர். எனவே எமது பெயரைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் குற்றச் செயல்களுக்கும் ஏமாற்று வேலைகளுக்கும் வீண் வதந்திகளுக்கும் மக்களாகிய நீங்கள் இடமளிக்க வேண்டாம்.

அப்படி தங்களிடம் வரும் நபர்களிடம் உத்தியோகபூர்வமாக நாம் வைத்திருக்கும் அடையாள ஆவணங்கள் மூலம் தங்களை அடையாளப்படுத்துமாறு கேட்டு உறுதிப்படுத்தி எமது பெயரைப் பயன்படுத்தும் தீய சக்திகளிடமிருந்து இருந்து விலகி இருக்கும்படி எமது இனிய மக்களை வேண்டிக்கொள்கின்றோம்.

- என்று புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல் துறையின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-180)

### ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியத் தலைவர்களுக்குத் தெரிவிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்க விவகாரம் பற்றியும் ஜனாதிபதியின் கருத்துக்கள் வெளியிடப்படலாம் என்று கூறப்படுகிறது.

இந்திய விஜயத்தின் போது தென்னிந்திய அரசியல் பிரமுகர்களையும் ஜனாதிபதி சந்திப்பார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-ம)

### அமைதியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிகழ்ச்சியும் அங்கு நடைபெற்றது.

பொதுக் கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறை பிரதிநிதிகள் பலர் உரையாற்றினர்.

புதுவை இரத்தினதுரை தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

தீவுப் பகுதியை வைத்துக்கொண்டு போரை மீண்டும் ஆரம்பித்துவிட வேண்டும் - புரிந்துணர்வு உடன்படிக்கையைக் குலைத்துவிடவேண்டும் - என்று சிலர் கங்கணம் கட்டிக் கொண்டு நிற்கின்றனர்.

உடன்படிக்கையின் படி நாங்கள் எமது அரசியல் பணிகளைச் செய்வதற்காக எங்கும் செல்லலாம். அதற்கான உரிமை - உரிமம் - எமக்கு உள்ளது.

நாட்டில் சமாதானத்தை விரும்பாத ஒரு பெண் எப்படியாவது இந்த அமைதிச் சூழலைக் குழப்பியடித்துவிட வேண்டுமென்ற பிடியாக இருப்பது உங்களுக்குத் தெரியும்.

அவர் தனக்கென ஒரு தனியான படை அமைப்பபை காரைநகரிலும் வேலணையிலும் வைத்துக்கொண்டு சமாதானத்துக்கு வேட்டு வைக்க முயன்று கொண்டிருக்கிறார்.

விடுதலைப் புலிகளையும் படையினரையும் மோதவிட்டு - துப்பாக்கிகளை முழங்கவைத்து - சமாதான உடன்படிக்கையை கிழித்தெறிவதே அவரது நோக்கம். உடன்படிக்கையை மீறிய குற்றத்தை புலிகள் மீது அல்லது படைகள் மீது போடுவதே உள் நோக்கம். இதனை நாங்கள் புத்திசாதுரியமாக நோக்கி நிதானத்துடன் நடந்து வருகிறோம்.

நாங்கள் இதனை ஒரு இராஜதந்திர யுத்தமாகவே பார்க்கிறோம். இது போன்ற கலகலப்புக்களை முன்னரும் கண்டுள்ளோம். எனவே இதில் நிதானத்தைக் கடைப்பிடிக்கிறோம். ஏனெனில் சமாதானத்தை புலிகள் மானசீகமாக நம்புகிறார்கள்.

ஒரு போரின் மூலம்தான் அங்கு (தீவுப்பகுதிக்கு) நாம் போவது என்றால் அது எமக்கு உள்ளங்கையில் உள்ள உமியை ஊதுவது போன்றது - என்றார் புதுவை இரத்தினதுரை.

விடுதலையை நீங்கள் மானசீகமாக விரும்பினால் வன்னி மக்களைப் போன்று நீங்கள் எமக்குத் துணை புரிய வேண்டும். இந்தப் பேச்சு வெற்றி அளிக்கும் என்பது எமது அசைக்க முடியாத நம்பிக்கை. இந்தப் பேச்சு மூலம் நாம் பெற விரும்புவது சலுகைகளை அல்ல விடுதலையைத் தான். அந்த விடுதலைக்காகவே நாம் இங்கு வந்துள்ளோம். இந்த மண்ணை நேசியுங்கள்; போராடும் போராளிகளை நேசியுங்கள்.

அமைதியை நாமும் நம்புகிறோம். ஆனால், கண்ணை மூடிக்கொண்டல்ல - என்றும் அவர் தனதுரையில் தெரிவித்தார். (ஐ-5)


IBMS

Institute of Business Management Studies

வாழ்த்துகின்றோம்!



A/L 2002 பரீட்சைக்குத் தோற்றும் அனைத்து மாணவர்களுக்கும் IBMS கணனி நிறுவனத்தின் வாழ்த்துக்கள்.

AL 2002

Wish you all the best !!

701, K.K.S. Road, Jaffna.

IBMS குடும்பத்தினர்


## மரண அறிவித்தல்

### சங்கரப்பிள்ளை மயில்வாகனம்

குப்பிளானைப் பிறப்பிடமாகக்கொண்ட சங்கரப்பிள்ளை மயில்வாகனம் நேற்று (21-04-2002) ஞாயிற்றுக்கிழமை இந்தியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை - தெய்வானை தம்பதியினரின் இளைய புத்திரனும் இராசேஸ்வரியின் அன்புக் கணவரும் முத்துக்குமாரு, காலஞ்சென்ற வீரவாகு அவர்களின் அன்புச் சகோதரனும் வரதராஜன், மகிழ்ராஜன், வரததேவி, காலஞ்சென்ற தனராஜன், வரதினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

இறுதிக்கிரியைகள் நேற்று (21-04-2002) ஞாயிற்றுக்கிழமை இந்தியாவில் நடைபெற்றன.

தகவல்:
சி.பத்மாசலன் (பாசு)
(சகோதரன்)

விளையாட்டரங்க வீதி,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

(C/21830)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22.04.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.